TO SHARE THE LIGHT

# தீபகச் சுடர்

அக்டோபர் 2024

தீபம் 13 சுடர் 05

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



திருச்செபமாலை

## ஒன்றாய் செபிக்கும் குடும்பம் ஒன்றாய் வாழும்!

# தீபகத்திலிருந்து **இறையாசீர்**



*அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,*

**ஜெபமாலை மாதா : நவம்பர் மாதத்தில் நம் குடும்பங்களுக்கான ஒரு ஒளி விளக்கு**

நவம்பர் மாதம் உலகம் முழுவதும் உள்ள கத்தோலிக்கர்கள் அனைவருக்குமான ஒரு சிறப்பான மாதமாகும். ஏனெனில் இம்மாதத்தில் திருசெபமாலை அன்னையின் திருவிழாவைக் கொண்டாடுகிறோம். இந்த கொண்டாட்டத்தின் வழியாக திருஅவை நம் அன்னை வழியாக கிறிஸ்துவின் மறையுண்மைகளை சிந்தித்து செபிக்க நம்மை அழைக்கின்றது. இந்த செபமாலை பக்தி முயற்சி என்பது நமது குடும்பங்களில் வெறும் செபமாக இல்லாமல், இதன்வழியாக நம் குடும்பங்களில் கடவுளின் அன்பும், அருளும், அமைதியும், சமாதானமும், ஒற்றுமையும் ஏற்படுத்தும் மிகச் சக்தி வாய்ந்த கருவியாக அமைகிறது. மீண்டும் மீண்டும் சொல்லப்படும் செபமாலை செபத்தினால் இயேசுவின் பிறப்பு வாழ்க்கை, இறப்பு, மற்றும் உயிர்த்தெழுதல் ஆகிய மறையுண்மைகளை நாம் சிந்தித்து செபிக்கவும், கடவுள்மேல் நம்பிக்கை வைத்து செபிக்கவும் நம்மை அழைக்கிறது. எனவே, நாம் செய்யும் செபமாலை நம் அன்னையின் பரிந்துரையால், நாம் கடவுளோடு உறவுடன் வாழ வழி செய்யும் மிகச் சிறந்த வழியாக செயல்படுகின்றது.

**கத்தோலிக்க குடும்பங்களுக்கு தினசரி செபமாலை செபிக்க ஓர் அழைப்பு**

போர்களும், துன்பங்களும், வருத்தங்களும், வாட்டி வதைக்கும் இவ்வுலகில் ஒரு குடும்பமாக நம்பிக்கையுடன் செபிக்க கடவுளால் நமக்கு கொடுக்கப்பட்ட ஒரு சிறந்த, சக்தி வாய்ந்த கருவி "திருச்செபமாலை". திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் **"ஒன்றாய் செபிக்கும் குடும்பம் ஒன்றாய் வாழும்"** என்று கூறுகிறார். இது ஒன்றாய் திருச்செபமாலை செபிப்பதையும் குறிக்கின்றது. ஒரே குடும்பமாக நாம் சேர்ந்து திருச்செபமாலை செபிப்பதால் நாம் ஒற்றுமையுடனும், அன்புடனும், சகோதரத்துவத்துடனும் வாழ முடியும். சிறப்பாக குடும்பத்தில் பெற்றோர் பிள்ளைகள் சேர்ந்து செபமாலை செபித்தால் நாம் சேர்ந்து வாழ வழிவகுக்கின்றது.

மிகவும் சக்தி வாய்ந்த இந்த செபமாலை பக்தி முயற்சியை பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு கற்றுத்தர வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை புனித ஜான்போஸ்கோ தம் வாழ்நாளில் கற்றறிந்து வலியுறுத்துகிறார். அவர் ஒருமுறை **"திருச்செபமாலை தினமும் செபியுங்கள், அன்னை மரியாள் உங்கள் துன்பங்களிலிருந்தும், வருத்தங்களிலிருந்தும் வழிநடத்துவார்"** என்று கூறினார். இந்த எளிய செபமுயற்சி பிள்ளைகளுக்கு கடவுளின் பராமரிப்பையும், அன்பையும், வழிகாட்டுதலையும் நினைவூட்டுவதோடு மட்டுமல்லாமல் கடவுள் அவர்களோடு பயணிக்கிறார் என்பதையும் நினைவூட்டுகிறது.

திருத்தந்தை பிரான்சிஸ் திருசெபமாலை பக்தி முயற்சியை ஒரு அன்றாட பழக்க வழக்கமாக மாற்றி நம்மை செபிக்கச் சொல்கிறார். அவர் "திருச்செபமாலை என்னை எப்போதும் வழிநடத்தும் செபமாகும்" என்று கூறுகிறார். குடும்பங்களில் நாம் செய்யும் இந்த செபமாலை செபிப்பதன் வழியாக நம் செபமாலை அன்னை, நம்மோடு சேர்ந்து நம்மை வழிநடத்தி அன்பிலும், அமைதியிலும் வாழ வழிச் செய்கிறார்.

**செபமாலை குடும்பங்களுக்கான ஒரு சிறந்த சக்தி**

செபமாலை குடும்பங்களில் சிறந்த மாற்றத்தை உருவாக்கும் ஒரு சக்தி. இதன் வழியாக நாம் செபமாலை செபிப்பதன் வழியாக நாம் கிறிஸ்துவையே நம் இல்லங்களுக்கு அழைத்து வர முடியும். கடவுளுக்கென்று ஒரு நேரத்தை நாம் ஒதுக்கி செபித்தால் கடவுள் நம்மோடு இருக்கின்றார் என்பதை உணர முடியும். செபமாலையை தனியாக செபிப்பதைக் காட்டிலும் ஒரு குடும்பமாக சேர்ந்துச் செபித்தால் தீயோனை ஒரு படையாக நாம் செபமாலை மூலம் வெல்ல முடியும். குடும்பமாக சேர்ந்துச் செபித்தால் எதிரியின் எல்லா சவால்களையும் வெல்ல முடியும். திருச்செபமாலை மாதமாக நமக்கு அளிக்கப்பட்ட இந்த மாதத்தில் குடும்பமாக தினமும் திருசெபமாலையை பக்தியுடன் செய்ய உறுதிக்கொள்வோம்.

என்றும் அன்புடன்

அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச

இயக்குநர் - தீபகம்

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 01.10.2024 | குழந்தை இயேசுவின் புனித தெரேசா விழா - திருப்பலி | 02 |
| 05.10.2024 | அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லி - திருப்பலி | 03 |
| 06.10.2024 | பொதுக்காலம் 27ம் ஞாயிறு - திருப்பலி | 04 |
| 07.10.2024 | புனித செபமாலை அன்னை - திருப்பலி | 05 |
| 11.10.2024 | புனித 23ம் ஜான் - திருப்பலி | 07 |
| 13.10.2024 | பொதுக்காலம் 28ம் ஞாயிறு (அருளாளர் அலெக்ஸான்டிரினா மரியா) - திருப்பலி | 08 |
| 17.10.2024 | அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார் - திருப்பலி | 09 |
| 18.10.2024 | புனித லூக்கா நற்செய்தியாளர் விழா - திருப்பலி | 11 |
| 20.10.2024 | பொதுக்காலம் 29ம் ஞாயிறு - திருப்பலி | 12 |
| 22.10.2024 | புனித இரண்டாம் ஜான்பால் - திருப்பலி | 13 |
| 00.10.2024 | புனித லூயிஜி குவனெல்லா - திருப்பலி | 14 |
| 27.10.2024 | பொதுக்காலம் 30ம் ஞாயிறு - திருப்பலி | 16 |
| 28.10.2024 | புனிதர்கள் சீமோன், யூதா திருத்தூதர்கள் - திருப்பலி | 17 |
| 29.10.2024 | புனித மைக்கேல் ரூவா - திருப்பலி | 18 |


## பகுதி 2: நம்பிக்கையில் வளர...


| | |
|---|---|
| புனித லூக்கா, சீமோன், யூதா குறிப்பு அறிவோம் | 20 |
| யார் இந்த செபமாலை அன்னை? | 21 |
| அருளாளர் அலெக்சான்ரினா மரியா - வாழ்வின் பாடம் அறிவோம் | 24 |
| திருஅவைச் செய்திகள் | 26 |

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 01.10.2024 குழந்தை இயேசுவின் புனித தெரேசா விழா திருப்பலி

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

குழந்தை இயேசுவின் புனித தெரேசா அன்பின் சிறிய வழியைப் பின்பற்ற நம்மை இத்திருப்பலைச் சிறப்பிக்க நம்மை அழைக்கின்றார். அமைதியையும், நட்பையும் விதைக்கும் ஒரு புன்னகை அல்லது ஒரு சிறிய அன்புச் செயல் நம்மைவிட்டு நழுவிச் செல்லாமல் பார்த்துக்கொள்ள இன்றைய நாள் திருப்பலிக்கு அழைக்கிறார். இவர் 1873ம் ஆண்டு சனவரி 2ம் நாள் பிரான்ஸ் நாட்டில் பிறந்தார். இவர் தனது 4ம் வயதில் தாயை இழந்தார். 1886ம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு திருநாளன்று இறைவனின் ஆழ்ந்த அனுபவத்தைப் பெற்றார். தனது 15வது வயதில் கார்மேல் துறவு மடத்தில் சேர்ந்து தன் விழா நாட்களை செபத்திலும், தவத்திலும் கழித்து வந்தார். இவர் செபங்கள் மூலம் மறைப்பரப்புப் பணியாளருக்குரிய பணிகளைச் செய்து வந்தார்.

இவரது வாழ்வில் மனந்திரும்ப மறுத்த ஒரு கொலைக்காரனை மனந்திரும்பும்படி தனது உணவு, உறக்கம், வேலை, விளையாட்டுகள் அனைத்தையும் செபமாக மாற்றினார். "இறக்கும்போது இயேசுவிடம் ஒரு மனந்திரும்பிய பாவியின் ஆன்மாவை என் கையில் எடுத்துச் செல்வேன்" என்று கூறியபடி காசநோயின் பாதிப்பினால் பாதிக்கப்பட்டு 1897ம் ஆண்டு செப்டம்பர் 30ம் நாளில் தனது 24ம் வயதில் இறையடிச் சேர்ந்தார். திருத்தந்தை 2ம் யோவான் பவுல் இவரை திருஅவையின் மறைவல்லுனர் என்று அறிவித்தார். "நான் விண்ணகத்திற்குச் சென்ற பிறகு நான் அங்கு சும்மா இருக்கமாட்டேன். இந்த பூமிமீது ரோசா மலர் மாரி பொழிவேன். அதாவது ஏராளமான புதுமைகள் செய்வேன்" என்று கூறினார். அதன்படி இன்றுவரை ஏராளமான புதுமைகள் செய்து வருகிறார். இவர் "மறைப்பரப்பு நாடுகளின் பாதுகாவலர்" என்று அறிவிக்கப்பட்டுள்ளார். இவரின் வாழ்வை முன்மாதிரியாகப் பின்பற்றி நாமும் வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் உருவே இறைவா, எங்கள் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் தூய ஆவியின் துணைக்கொண்டு திருஅவையை ஆவியிலும், உண்மையிலும் வழிநடத்திச் செல்ல தேவையான அருளைப் தொழிந்தருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. சிறுபிள்ளைகளைப்போல தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே, விண்ணரசில் மிகப்பெரியவர் என்று சொன்னவரே, எம் இளையோர் பெற்றோர்களுக்கும், பெரியவர்களுக்கும் தாழ்ச்சியான உள்ளத்துடன் மரியாதையுடன் நடந்துக்கொள்ளக்கூடிய மனப்பக்குவத்தை தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. "அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு" என்றவரே, எம் இளைஞர்களுக்கு புனித தெரேசா விட்டுச்சென்ற ஆத்தும ஆதாயம் என்னும் உன்னத பணிச் செய்ய தூய ஆவியின் வரங்களைப்பொழிந்தருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 05.10.2024 அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லி திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

இனிய சகோதர சகோதரிகளே, திருஅவை இன்று தொன்போஸ்கோவின் சலேசிய மாணவர் அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லி அவர்களின் நினைவு நாளைக் கொண்டாடுகிறது. இவர் 1918ம் ஆண்டு மார்ச் 21ம் நாள் இத்தாலி நாட்டின் பெராரா என்னும் ஊரில் பிறந்தார். இவர் தொன்போஸ்கோவின் ஆரட்டரி மாணவர், பொறியியல் வல்லுநர் மற்றும் இளம் அரசியல்வாதியாகவும் சமுதாய அக்கறையுடனும் வாழ்ந்தார். 1941ம் ஆண்டு பொறியியலை முடித்தவுடன் இரண்டாம் உலகப்போரில் இராணுவத்தில் சேர்ந்தார். அதன்பின் "பியாட்" மோட்டார்க் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தார். இரண்டாம் உலகப்போர் முடிந்ததும் தங்களுடைய நகரைப் புதுப்பிப்பதில் மும்முரமாக ஈடுபட்டார். உயிருக்காகப் பயந்து ஒளிந்துக்கொண்டிருந்த அகதிகளைத் தனது மிதிவண்டியின் மூலம் தேடிச்சென்று அவர்களுக்கு உணவளித்து வந்தார்.

ஜெர்மனியர்கள் இத்தாலியை ஆக்கிரமித்தபோது, நாடு கடத்தப்படுவதிலிருந்து அநேக இளைஞர்களைப் பாதுகாத்தார். 1945ம் ஆண்டு செப்டம்பர் 23ம் நாள் தனது 26ம் வயதில் விடுதலை இயக்கத்தின் ஆலோசகராக செயல்பட்டு மக்கள் தங்கி வாழ வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் பொறுப்பை ஏற்றார். இயேசு சொன்னது செய்ததைப்போல் "பணிவிடை பெறுவதைவிட பணிவிடைப் புரிவதே சிறந்தது" என்பதனை இவர் தம் வாழ்வில் வாழ்ந்துக் காட்டினார். 1945ம் ஆண்டு ரிமினி மறைமாவட்ட ஆயர் இவரை கத்தோலிக்க நிபுணர்களை வழிநடத்தும்படி கேட்டுக் கொண்டார். இவர் தன்னுடைய அர்ப்பண வாழ்வை "கலாச்சாரம் மற்றும் பிறரன்பு" என்ற இரண்டே வார்த்தைகளில் வெளிப்படுத்தினார். ஆல்பர்ட் மர்வெல்லி நற்கருணையின்மீது ஆழ்ந்த பக்திக்கொண்டு அதன்மூலம் தனது மீட்புப்பணிக்கும், விடுதலைப் பணிக்கும் சக்தியும் வல்லமையும் பெற்றார். திருத்தந்தையின் "பிறரன்பின் பொறியியல் வல்லுநர்" என்ற பட்டத்தை வழங்கினார். இவரின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு இறையன்பில் இணைக்கப்பட இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார் இறை ஊழியர்கள் அனைவரும் நல்லாயனாகிய கிறிஸ்து தங்களிடம் ஒப்படைத்த மந்தையை நன்றாகப் பராமரித்து பேணிக்காக்க அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இளையோரின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்து வரும் சலேசியர்களும், சலேசிய குடும்பத்தினரும் இளையோரை தொன்போஸ்கோ வழியில் நடத்தி சமுதாய முன்னேற்றத்திற்காக பணிபுரிய அவர்களைத் தூண்ட உம் தூய ஆவியாரை அனுப்பி ஆட்கொள்ள வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகிய நிலைகளில் உழைக்கும் அனைவரும் நீதியிலும், உண்மையிலும் வாழவும், இறையரசின் மதிப்பீடுகளில் அடிப்படை சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டுமென்று உம்மை மன்றாடுறோம்.

## 06.10.2024 பொதுக்காலம் 27ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. லதா சுரேஷ்

I. தொ.நூ. 2: 18-24 II. எபி. 2: 9-11 மாற்கு 10: 2-16

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்றைய வாசகங்கள் அனைத்தும் குடும்ப வாழ்வு அதன் மேன்மையை விளக்குகிறது. இறைவன் உலகைப் படைத்து அதில் மனிதனை உருவாக்கினார். மனிதன் தனிமையைக் கண்டு அது நல்லதல்ல என்று அவனுக்கேற்ற துணையாக பெண்ணைப் படைத்தார். அவர்கள் இருவரும் படைப்பையாள, பலுகிப் பெறுக ஆசீரை வழங்கினார். கடவுள் படைப்பின் மேன்மையைக் காட்டும் கணவன் மனைவி உறவு என்பது தலைச்சிறந்த உன்னதமான ஒரு பந்தமாகும். இப்பந்தத்தில் அன்பு, அரவணைப்பு பரஸ்பர உறவு மேலோங்கி நிற்க வேண்டும். விவிலியத்தில் பல்வேறு ஆசீர்வதிக்கப்பட்ட தம்பதியரை இறைவன் அடையாளம் காட்டுகின்றார். ஆபிரகாம், சாரா, ஈசாக், ரெபேக்கா, நோவாவின் சந்ததியினர் இவ்வாறு ஆசீர் பெற்றவர்கள் அனைவரும் ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழிகளில் நடந்தவர்கள்.

அவ்வாறு ஆண்டவருக்கு அஞ்சி நடந்தால் அந்த ஆணுக்கு கிடைக்கும் பேறுகளும் அவனுக்கு துணையாக அமையும். துணைவி எவ்வாறு செழித்தோங்கி தன் குடும்பத்தை காப்பாள் என்றும் அவர்களின் சந்ததியினர் எவ்வாறு வளமையை காண்பார்கள் என்பதையும் இன்றைய வாசகங்கள் நமக்கு தெளிவாக விளக்குகின்றது. மேலும் இவ்வாறு ஆசீர்பெற்று இணைந்தவர்கள் வாழ்நாள் முழுவதும் அவர்களின் சுகம் துக்கங்களில் இணைந்திருக்க வேண்டுமென்பதை கட்டளையாகவே அளிக்கின்றார். சிறுப்பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் என்று இயேசு 2000 ஆண்டுகளுக்கு முன்பே கூறியுள்ளார். நாமும் சிறு குழந்தையாய் மாறுவோம், இறையாட்சிக்கு நம்மை ஒப்புக் கொடுத்து, அதற்கு தகுதிப் பெறும் பொருட்டு இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. கருணைக் கடலே எம் இறைவா, அருளடையாளத்தில் திருமணப் பந்தத்தை துறந்து குருத்துவத்தை ஏற்றிருக்கும் எம் ஆயர்கள, குருக்கள்,

துறவறத்தார் தாம் பெற்ற அருளடையாளத்தில் நிலைத்திருக்கவும், அவர்களின் வாழ்நாளெல்லாம் உமக்கு அஞ்சி தெய்வ பயத்தில் வாழவும், தேவையான அருளைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. படைப்பின் பரம்பொருளே எம் இறைவா, நீர் மனிதர்கள் வாழ அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் படைத்து, அவற்றை அனுபவிக்க, ஆணையும் பெண்ணையும் படைத்தீர். இன்றைய உலகம் அழிவுக்குச் சென்றுக் கொண்டிருக்கும் இக்காலச் சூழ்நிலையை மாற்றி அமைதியோடு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. கருணையின் திருவுருவே, நாட்டுத் தலைவர்கள் தங்களின் சுயநலப் போக்கை மறந்து, தங்களை முழுமையாக மக்களுக்குத் தியாகம் செய்யும் நல்லுள்ளம் கொண்டவர்களாக வாழவும், ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து ஒற்றுமையோடும், அமைதியோடும் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் என்றுரைத்த எம் இறைவா, இன்றைய உலகில் வாழும் குழந்தைகள், பலவிதமான இடையூறுகளுக்கு உள்ளாகி தவிக்கின்றனர். இவர்களின் தேவைகளை அறிந்து பாதுகாத்து வழிநடத்த வேண்டிய நல்லுள்ளம் கொண்டவர்களை உமது அன்பின் அரவணைப்பில் வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 07.10.2024 புனித செபமாலை அன்னை விழா திருப்பலி

**முன்னுரை**

திரு. செபாஸ்டின்

I. எசா. 35: 4-7 II. யாக். 2: 1-5 மாற்கு 7: 31-37

ஆண்டவரில் அன்பு கொண்ட சகோதர சகோதகரிளே, இன்று செபமாலை அன்னையின் விழாவினைக் கொண்டாடுகிறோம். இந்த மாதம் முழுவதையும் செபமாலை மாதாமாகவே கொண்டாடுகின்றோம். திருத்தந்தை 13ம் கிரகோரியால் இவ்விழா அறிமுகம் செய்யப்பட்டது. செபமாலை செபிப்பதன் வழியாக மரியன்னையை போற்றுகிறோம். அப்போது தன் மகன் இயேசுவுடன் நம் அருகில் அன்னை வருவார். இயேசு தனித்து வருவதில்லை. தூய தமத்திருத்துவத்தோடு வருகிறார். தூய தமத்திருத்துவம் உள்ள இடத்தில் வானவர் பேரணியும் கூடுகிறது. செபமாலை செபிக்கும் (இடத்தில்)போது ஒட்டுமொத்த விண்ணகமும் மண்ணகத்திற்கு கொண்டுவரமுடியும் என்கிறார் புனித லூயிஸ் மரிய மோன்போர்ட்.

செபமாலையின் வரலாற்றை சற்று புரிந்துக்கொள்வோம். தொடக்கக்காலத்தில் 150 திருப்பாடல்களை செபிக்கும் பழக்கம் இருந்தது. படிப்பறிவற்ற பாமர விசுவாசிகளால் 150முறை விண்ணுலகில் இருக்கின்ற என்ற செபம் சொல்லப்பட்டு வந்தது. 13ம் நூற்றாண்டில் புனித சாமிநாதர்

ஆல்பிஜென்சிய தப்பறைகளை எதிர்த்து போராடி சோர்ந்துபோனபோது மரியன்னை அவருக்குக் காட்சிக்கொடுத்து செபமாலையை மக்கள் செபிக்கும்படி அன்னை கூறினாள். விசுவாசிகள் 150 அருள்நிறைந்த மரியே என்ற செபத்தை செபித்தனர். மக்கள் மனந்திரும்பினார்கள், தப்பறையும் ஒழிந்தது, செபமாலை பக்த பரவ ஆரம்பித்தது. கி.பி. 1545 ___ 1563 வரை 18வது வருடம் 23ம் அமர்வாக திருஅவையின் கர்தினால்கள், ஆயர்கள் கூடி செபமாலை செபிப்பதற்கு முழு வடிவம் பெற்றுத் தந்தனர். இறைவனைப் புகழ திரித்துவப் புகழ் 10மணி முடிவில் சேர்க்கப்பட்டது.

இன்னும் அதிகமாக வலுசேர்க்கும் விதத்தில் நம்பிக்கை அறிக்கையில் இச்செபம் துவங்குகிறது. கிறிஸ்து பாடுபட்ட சிலுவையில் துவங்குகிறது. மரியன்னை பாத்திமாவில் கற்றுக்கொடுத்த செபத்துடன் ஒவ்வொரு 10மணியும் முடிகிறது. பெர்னதெத்துக்கு அன்னை சொன்ன செபத்துடன் செபமாலை முடிக்கிறோம். செபமாலை பல செபங்களின் கூட்டாக திகழ்கிறது. விவிலிய மறையுண்மைகள் அருள்நிறைந்த செபம், விண்ணுலகில் இருக்கின்ற செபம், மூவொரு இறைவன் புகழ் செபம் என அமைந்துள்ளது. **செபமாலையின் முதற்பகுதி:** தந்தையாம் கடவுளின் வார்த்தைகளை கபிரியேல் சொன்னது, பிற்பகுதி தூய ஆவியால் நிறைந்து எலிசபெத்து சொன்னது, **2ம் பகுதி:** திருஅவை நமக்காக சொல்லித்தந்த செபம். செபமாலை விவிலியத்திற்கு புறம்பானது அல்ல என்பதை ஏற்போம். அது இறைவனுடன் நம்மை இணைக்கும் பாலம் என்பதை உணர்ந்து அன்னை வழி இயேசுவை அனுபவிக்க வரம் கேட்டு இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையின் முன்மாதிரிகையே, உம்மால் தேர்ந்துக் கொள்ளப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் உமது வல்லமையை உணர்ந்து, மக்களும் உம்மை முழுமையாக நம்பிக்கையோடும், இறைவல்லமையோடும் உம்மோடு பயணிக்க வரமருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்புத் தந்தையே எம் இறைவா, உலக நாடுகளிடையே போர்களைப் பற்றிய அச்சமின்றி அமைதி, நல்லிணக்கம், ஒற்றுமை போன்ற நல்லுறவில் வளர, உலகமக்கள் அனைவரும் அன்னை மரியாள் வழியாக செபமாலை செபிக்கும் பழக்கத்திற்கு தங்களை ஈடுபடுத்திக்கொண்டு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. இறையன்பிற்கு இலக்கமானவரே, எம் பங்கு, பணிக்குழுக்கள், பக்தசபைகள், அன்பியங்கள், குடும்பங்கள் என்று பல அமைப்புகளிலும், தனி செபத்திலும் செபமாலையின் மகத்துவத்தை உணர்ந்து செபமாலைச் செபித்து தீமையை எதிர்த்து போரிட முழு ஆற்றலையும், வல்லமையும் அளித்து பாதுகாத்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 11.10.2024 புனித 23ம் ஜான் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

இன்று வரலாற்றில் தடம் பதித்த பொன்னேடுகளில் பொறிக்கப்பட வேண்டிய ஒரு மாபெரும் திருஅவைத் தலைவராக குறுகிய காலத்தில் சிறந்த ஆட்சியாளராக எல்லாவற்றிற்கும் மேலாக திருஅவை இருப்பது இவ்வுலகிற்காகவே. மறுமலர்ச்சி திருஅவையில் மலர்ந்தால் அது இந்த உலகினையே மாற்றும் என்பதனை உணர்ந்து அதற்காக இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தை கூட்டிய நல்ல மனிதர். இவரைப்பற்றி எழுதிட ஏடுகள் போதாது. ஆகையால் சில பதிவுகளை மட்டும் நாம் தியானிப்போம், அதற்காக அன்புடன் வணங்கி வாழ்த்தி மகிழ்ந்திட அனைவரையும் வரவேற்கிறேன். இவர் 261வது திருத்தந்தை, பிறப்பு - 25.11.1881 இத்தாலியில் உள்ள பெர்கமோ, பெற்றோருக்கு 13 மகன்களில் நான்காவது மகன், இயற்பெயர் - ஆஞ்சலோ ஜூசேப்பே ரொங்கல்லி வேளாண்மை குடும்பம் சிறு வயதிலேயே அருட்பணியாளராக வேண்டும் என ஆர்வம். உறவினரின் நிதியுதவியால் குரு மடத்தில் சேர்ந்து பயிற்சி பெற்று குறிக்கோளுரையாக கீழ்ப்படிதல், அமைதி என்பதை சூளுரைத்து உரோமை நகரில் மோந்தே சாந்தோ அன்னை மரியா ஆலயத்தில் குருவானார்.

பெர்கமோ மறைமாவட்டத்தின் ஆயரின் செயலராக நியமிக்கப்பட்டு திறம்பட பணி புரிந்தார். அப்போது குரு மடத்தில் திருஅவை வரலாறு பற்றி கற்பித்தார். இத்தாலியின் நற்செய்தி அறிவிப்புப் பணியகத்தில் தேசிய அமைப்பின் தலைவராக செயல்பட்டு மறையறிவிப்பு பணியெனும் மடல் உருவாக பெரும் பணி செய்தார். லெம்பார்டி மாநிலத்தில் உள்ள பட்டாளத்தில் கட்டாய ராணுவ சேவைக்கு உட்படுத்தப்பட்டு சேவை செய்தார். முதலாம் உலகப் போரில் சுகாதாரப் பிரிவில் பணியாற்றி ஆன்ம ஆலோசகர் என்ற பதவி பெற்றார். 1958ல் 23ம் அருளப்பர் என்ற திருப்பெயர் புனைந்து திருத்தந்தையாக தேர்வானார். உலக அமைதிக்காக பாடுபட்டவர். இவர் எழுதிய "அவனியில் அமைதி" என்ற மடல் அனைத்துலகத்தோரை ஈர்த்து பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அமெரிக்க அதிபர் கென்னடி, ரஷ்ய அதிபர் குருஷேவ் இருவரிடமும் போர் நிறுத்தத்தின் அவசியத்தை வலியுறுத்தினார். அதனால் அணு ஆயுதப் போர் தவிர்க்கப்பட்டது. 03.06.1963 ஆண்டு பொதுச்சங்கம் நிறைவேறும் முன்பே இறையடி இணைந்தார். திருத்தந்தை பிரான்சிசு அவர்கள் முதல் முறையாக திருப்பலி நிறைவேற்றி இவருக்கும் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பருக்கும் உலகமே அதிசயிக்க அரசர்கள் அரசிகள் அதிபர்கள் பிரதம அமைச்சர்கள் மிகப்பெரிய தலைவர்கள் பல நாடுகளிலிருந்து வர எட்டு இலட்சம் மக்கள் இதுவரை இல்லாத அளவிற்கு கூடியிருக்க புனிதர் பட்டம் வழங்கி சிறப்புச் செய்து கௌரவித்தார். சிந்தனைக்கு இவரைப் போன்ற நல்ல மனிதம் என்றும் திரு அவைக்குத் தலைவராக வரவேண்டும் என இணைந்து மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, மாபெரும் நல்லுள்ளம் கொண்ட இறைச்சமூகமாக திருஅவைக்கு தியாக சிந்தனையுடனும், சமூக அக்கறையுடனும் பணிபுரிய நல்ல தலைமைகள் உருவாக அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. அழைத்தவரே இறைவா, உமது அழைப்பு வீணாகாமல் உலகெங்கும் சென்று நல்ல செய்தியான மறுமலர்ச்சி உருவாக்கம் பெற இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் நோக்கம் நிறைவேற ஒவ்வொரு மனிதமும் உழைக்க வேண்டிய அவசியத்தையும் ஆற்றலையும் வல்லமையையும் பொழிந்திட உம்மை மன்றாடுகிறோம்.
3. நேசிப்பையே சுவாசமாய் ஏற்கச் சொன்ன இறைவா, உலகு அமைதியாக ஒற்றுமையுடன் சமாதானத்துடன் வாழ வேண்டும் அதற்காக நல்ல தலைவர்கள் புனித 23 ம் அருளப்பர் போன்று திரு அவைக்கும் சமூகத்திற்கும் உழைப்பவர்கள் உருவாகிட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 13.10.2024 பொதுக்காலம் 28ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

I. சா.ஞா. 7: 7-11 II. யாக். 4: 12-13 மாற்கு 10: 17-30

இவ்வுலக மானிடர் உலகச் செல்வங்களை பெரிதும் பாராட்டி அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு இறைவன் கொடுத்த அரும்பெரும் சுடரொளியான ஞானத்தை இழந்து வருகின்றனர். இவ்வுலக செல்வங்கள் அழியக்கூடியது, ஆனால் இறைவன் வழங்கும் ஞானச் செல்வம் என்றுமே நிலைத்து நிற்கும் ஆற்றல் வாய்ந்தது. அதனால்தான் சாலமோன் ஞானத்தை வேண்டினார், அதனோடு வந்த அத்தனை செல்வங்களும் நிலைத்து நின்றன. இதனை இன்றைய முதல் வாசகத்தில் காண்கிறோம். மேலும் இரண்டாம் வாசகத்தில் கடவுளின் வார்த்தை எவ்வளவு வலிமைமிக்கது என்று நமக்கு கற்பிக்கப்படுகிறது. உயிருள்ளதும், ஆற்றல் வாய்ந்ததும், இருபக்கமும் வெட்டக்கூடியதும், எந்த வாளினும் கூர்மையானதும், எலும்பு முட்டையும், மச்சையையும் ஊடுருவ கூடியதாகவும், உள்ளத்தின் சிந்தனைகளை சீர்த்தூக்கி பார்க்கிறதாகவும் உள்ளது.

இன்றைய நற்செய்தியில் நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள ஆண்டவர்தரும் அறிவுரைகளான தம் கட்டளைகளை கடைப்பிடிக்கவும், அவர்தம் பொருட்டு நற்செய்தியின் பொருட்டு வீடுகளையோ, தாயையோ, தந்தையோ, அனைத்து சொந்தங்களையோ, விட்டுவிட்ட எவரும் மறுமையில் நிலைவாழ்வை பெறுவார் என்றே கூறுகிறார். அதுமட்டுமல்ல, செல்வர்கள் இறையாட்சிக்குட்படுவது மிகவும் கடினம் என்றே கூறுகிறார். ஏனெனில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு நிலைவாழ்வை அடைய வேண்டுமென்ற மனநிலை அவ்வளவு எளிதில் அனைவருக்கும்

வந்துவிடாது என்ற மேற்கோள்கள் மூலம் காண்கிறோம். ஆகவே நிலைவாழ்வை அடையவேண்டுமென்றால் எல்லாவற்றையும் இழந்து, இன்னல்களில் துன்புற்றாலும், இரக்கம் நம்மீது பொழியப்படும் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையை வழிநடத்தும் இறைவா, நம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இயேசுவின் இறையாட்சியில் வாழ்ந்மு உம்மந்தையை பேணிவளர்க்கத் தேவையான அருள்வரங்களைப் பொழிந்தருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. நல்ல ஞானத்தை வழங்கும் இறைவா, நிலையில்லா உலகில் நிம்மதியின்றி உல்லாச வாழ்க்கையில் வீழ்ந்து, மதிமயங்கி அலையும் மானிடர்களை உம்பதம் சமர்ப்பிக்கிறோம். நிலையான உமதன்பு ஒன்றே தம்மை நிலைப் படுத்தும் என்பதை நாங்கள் உணர்ந்து வாழ வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. எளிமையின் நாயகனே இறைவா, உலக ஆடம்பரங்களை பெரிதாக எண்ணாமல் எளிய வாழ்வை வாழவும், அழிந்துபோகும் செல்வங்களை விட அழியாத விண்ணக வாழ்வுக்கு போகும் அரிய வழிகளை பின்பற்றியும், இறைவனின் கட்டளைகளை மறவாமலும், அதன்படி வாழவும் செயலாற்றவும் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. பாதுகாக்கும் இறைவா, நாட்டில் நடக்கும் அனைத்து வன்முறைகளும் ஒழியவும் மதசார்பற்ற நாடாக எம் இந்திய நாட்டை பாதுகாக்கவும், நாட்டுத் தலைவர்கள் பொறுப்புடன் ஆட்சி நடத்தவும், அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 17.10.2024 அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார் திருப்பலி

**முன்னுரை** திரு. சாம்சன்

புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார் சிரியா நாட்டைச் சேர்ந்தவர். சிறு குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் என்று இயேசு கூறும்போது கையில் வைத்திருந்த குழந்தைதான் புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார். இவருக்கு தியோபோரஸ் என்ற பெயரும் உண்டு. திருஅவையின் 3வது ஆயர் பேதுரு தொடர்ந்து பணிசெய்தவர். திருஅவையின் தந்தையர்களில் ஒருவரான இவர் இயேசுவின் வழியில் வாழ்ந்து மக்கள் மத்தியில் கடவுளை சுமப்பவர் என்று போற்றப்பட்டார். புனித பேதுரு, புனித யோகோசியாவுக்குப் பிறகு அந்தியோக்கு நகரின் 3வது ஆயராக பொறுப்பேற்றார். திருத் தூதர்களுக்குப் பிறகு திருஅவையின் மிகவும் புகழ்வாய்ந்த புனிதர் இவர். 40ஆண்டுகள் தனது ஆயர் பணியைத் தொடர்ந்தார். "கிறிஸ்தவர்களைத் தேடி கண்டுபிடிக்காதே, அப்படிப் பிடிப்பட்டவர்கள் தாங்களாகவே

கிறிஸ்தவர்கள் என்று அறிக்கையிட்டால் கொன்றுவிடு" என்று கொரோ அரசன் ராஜன் கொக்கரித்தான். இத்தகைய அரசாணை நடைமுறையில் இருந்தபோது ஏராளமான விவசாயிகள் விண்ணுக்கும் மண்ணுக்கும் பலியானார்கள்.

புனித அந்தியோக்கு இஞ்ஞாசியாரும் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டார். பல்வேறு துன்பங்கள், இடர்கள், இருந்தாலும் நற்செய்தி பணியின்மீது இவரது ஆர்வம் குறையவில்லை. சிரியாவிலிருந்து உரோமைக்குச் செல்லும்போது கொடிய விலங்குகளோடு இரவு பகல் போராடினார். பத்து தொழுநோயாளர்கள் மத்தியில் இருக்கும்படி கட்டிபோடப்பட்டார். காவலர்கள் கொடூரமாக நடந்துக்கொண்டாலும் அனைத்தையும் தாங்கிக் கொண்டு கிறிஸ்துவுக்காக பணிசெய்தார். பின்பு நாடுகடத்தப்பட்ட நிலையில் தன்னுடைய மரண சாட்சியத்தை ஆவலோடு எதிர்ப்பார்த்தார். நான் கொடிய விலங்குகளிடம் இறையாக இருக்கிறேன் என்று முன்னறிவித்தார். அதன்படியே 107ம் ஆண்டு சிங்கங்களுக்கு இறையாக வீசப்பட்டார். அரவை இயந்திரங்களுக்கு இடையில் மாட்டிய கோதுமை அப்பமாக மாறுவதுபோல சிங்கங்களின் கோரப்பல்லில் சிதையுண்டு தானும் வாழும் நற்கருணையாக மாற வேண்டுமென்று விரும்பினார். அந்தியோக்கு இஞ்ஞாசியாரைப்போன்று நாமும் திருஅவையை சுமக்கும்போது கடவுளைச் சுமப்பவர்களாகிறோம் என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு இத்திருப்பலியில் பக்தியோடு பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே இறைவா, எம் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்றும், மக்கள்மீது ஆழ்ந்த இறைப்பற்றை ஏற்படுத்தக்கூடிய நல்ல மனநிலையையும், மக்களுக்கு ஒரு முன்மாதிரியான வாழ்வை வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. வழிகாட்டும் ஒளிவிளக்கே எம் இறைவா, பங்கு மக்களையும், பங்குப் பணியாளர்களையும், தன்னார்வத் தொண்டர்களையும் உமது பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் செய்கின்ற ஒவ்வொரு பணியையும் நீர் அசீர்வதித்து, அவர்களோடு உடனிருந்து பயணிக்கத் தேவையான அருளைப்பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, சிறு குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் என்று கூறியவரே, இன்றைய சூழலில் குழந்தைகள் பலரும் பலவிதமான இன்னல்களுக்கு உட்படுத்தப்பட்டு துன்பப்படுகின்றனர். இவர்களை உம் கருணையினால் பாதுகாத்து, அவர்களுக்குத் தேவையான இறைஞானத்தையும், தைரியத்தையும் அளித்து வாழ்வில் உம்மைப் பின்தொடர வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 18.10.2024 புனித லூக்கா நற்செய்தியாளர் விழா திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

ஆண்டவரில் நம்பிக்கைக் கொண்ட சகோதர சகோதரிகளே, நற்செய்தியாளராகிய புனித லூக்கா மறைச்சாட்சியின் விழாவினைக் கொண்டாடுகின்றோம். இவர் சிரியாவில் உள்ள அந்தியோக்கியாவில் உள்ள கிரேக்கப் பெற்றோருக்கு பிறந்தவர். திருமறையை தழுவிய முதல் கிறிஸ்தவர்களில் இவரும் ஒருவர். தூய பவுலுடன் இரண்டாம், மூன்றாம் தூதுரைப் பயணங்களில் பங்குப் பெற்றவர். பிலிப்பு, செசரியாவில் பவுலுடன் சிறையில் இருந்தவர். அங்கே அவர் மூலம் வாய்மொழிப் பாடங்களையும், எழுத்து மூலங்களையும் தேடி ஆராய வாய்ப்புக் கிடைத்தது. பவுல் உரோமையில் வீட்டு கைதியாக இருந்தபோது லூக்காவுடன் இருந்தார். பவுலின் உடன் பணியாளர் மாற்கை சந்தித்து அவரது நற்செய்தி குறிப்புகளை சேகரிக்கும் வாய்ப்புப் பெற்றவர். இவர் ஒரு சிறந்த மருத்துவர், கைத்தேர்ந்த ஓவியருமாவார்.

அக்காயா பகுதியில் புறஇனக் கிறிஸ்தவர்களுக்காக நற்செய்தியை எழுதினார். இதை "இரக்கத்தின் நற்செய்தி" என சிலர் அழைக்கின்றனர். இவர் கடவுளின் எல்லையற்ற இரக்கத்தைக் காட்டும் ஊதாரி மைந்தன் உவமையை நமக்குத் தந்தவர். யூதரும் கிரேக்கரும் விண்ணகம் சேரவேண்டுமென பவுல் வற்புறுத்தி கூறி வந்தார். இதை இவரது நூலில் காணலாம். புற இனக் கிறிஸ்தவரான சிமியோன், "இருளகற்றும் ஒளியைக் கண்டதாகச்" சொல்கிறார். உங்கள் விண்ணகத் தந்தை இரக்கமுள்ளவராக இருப்பதுபோல் நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள். இழந்துபோனதை தேடி மீட்கவே இறைமகன் வந்துள்ளார். நம் கடவுள் இரக்கமுள்ள அன்பு வைத்தியர், பாவிகளின் நண்பன், துயரப்படுவோரை தேற்றுபவர் மானிட சந்ததியின் மீட்பர் என்று எண்பிக்கிறார். பாவிகள் இறைவனில் நம்பிக்கை வைக்கத் தூண்டுகிறார்.

அன்னை மரியாவின் பாடல், செக்கரியாவின் பாடல், கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபங்களை தந்தவர், மரியாள், எலிசபெத்து, மார்த்தா ஆகிய பெண் சீடர்களைப்பற்றி சொன்னவர். இயேசுவின் குழந்தைப் பருவத்தைப் பற்றி விரிவாக தந்தவர். பாலஸ்தீன வாய் மொழிப் பாரம்பரியம். எபேசில் யோவானைச் சந்தித்து அவரிடமிருந்தும், இயேசுவின் தாய் அன்னை மரியாவிடமிருந்தும் பலவற்றை சேகரித்து தந்தவர். இவர் அக்காயா மாநிலத்தில் உள்ள போயேந்தியாவில் 74ம் வயதில் மறைச்சாட்சியாக மரித்ததாக மார்சியாவுக்கு எதிராக எழுதப்பட்ட முன்னுரையில் கூறுகிறது. புனித லூக்காவிடம் விளங்கிய இறையச்சம், நம்பிக்கை, தோழமையுணர்வு இயேசுவை அனைவரும் அனுபவிக்க வேண்டுமென்ற இரக்க குணம் இவைகளை நாமும் நமதாகக் கொள்ள இறையருள் வேண்டி இப்பலியில் பக்தியுடன் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எம் திருஅவைப் பணியாளர்கள் புனித லூக்காவைப் போன்று ஆண்டவர் இரக்கமுள்ளவர் என்ற மையக் கருத்தைக் கொண்டு, கிறிஸ்துவை அறியாதவர்கள் மத்தியில் ஆர்வமாய் நற்செய்தி பணியாற்றும் வல்லமையையும், தெய்வீக அருட்கொடைகளையும் இவர்களுக்கு அளித்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நம் இந்திய நாட்டில் மதமாற்ற தடைச் சட்டத்தை கடந்து மக்கள் சுதந்திரத்துடன் இறைவார்த்தையை அறிவிக்கவும், கேட்கவும் இறை நம்பிக்கைப் பெற்று மனமாற்றம் பெறவும், அதனால் "உண்மையான" உள்ளத்தை அறிந்துக் கொள்ளவும் அருள் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. இங்கு கூடிசெபிக்கும் நாங்கள் தூய ஆவியால் எழுதப்பெற்ற நற்செய்தியை முழுமனதுடன் நம்பி, இறைப்பற்றுடனும் இரக்கத்துடனும் வாழ்வை மாற்றிக்கொள்ள உம் ஆவியைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. இயற்கைப் பேரழிவுகளால் பாதிக்கப்பட்டோர் போர்களினால் வறுமைக்குத் தள்ளப்பட்டோர், பிணி, மூப்பின் பிடியில் துன்புறுவோர், போதைப் பழக்கங்களுக்கு அடிமையானோர் அனைவரும் உம் இரக்கப் பெருக்கத்தால் புதுவாழ்வு பெற்றிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 20.10.2024 பொதுக்காலம் 29ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

I. எசா: 53: 10-11 II. எபி : 04: 14- 16 மாற்: 10: 35-45

இன்று பொதுக்காலம் 29 ம் ஞாயிறு திருப்பலியை தொண்டு ஏற்க அல்ல தொண்டு புரியவே என்ற சிந்தனையில் தியானித்து வாழ்வாக்கிட சிறப்பிக்க திருஅவை மக்களாக நாம் இணைத்துள்ளோம் அன்புடன் அனைவரையும் வரவேற்கிறோம். இன்று உள்ள சூழல் கல்வித் தகுதி பட்டம் பதவி பொருளுடையோருக்கு மதிப்பு தருதல் சமய சாதி இன மொழி பார்த்து பழகுதல் பதவி தருதல் ஏற்றத் தாழ்வுகள் எளியோரிடம் இருப்பதை பறித்தல் ஒதுக்குதல் ஓரங்கட்டுதல் போன்றவைகள் உள்ளன ஆகையால் பணி புரிபவர்கள் துன்பங்கள் ஏற்றாலும் தொடர்ந்து செய்ய வேண்டும்.அதுவும் எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி செய்ய வேண்டும் என அறிவுறுத்துகிறது. ஒவ்வொருவரின் அழைப்பும் ஏதோ ஒரு நோக்கம் நிறைவேறவே காரண காரியமின்றி எதுவும் உருவாக்கப்

படவில்லை.இன்றைய முதல் இறை வார்த்தையும் இறை இயேசுவின் வாயினின்று உதிர்ந்த இறை முத்துக்களும் இதனையே தெளிவாக்குகிறது என்னோடு சிலவற்றில் தான் நீங்கள் பங்கு பெற இயலும் அனைத்திலும் அல்ல துன்புறுவோர் நிறைவடைவர் என்ற செய்தியும் தெரிகிறது. ஆகவே சுயம் அறுத்து பொது நோக்கி பயணிக்க பணியும் பணிவும் மிக அவசியம் என்பதனை நாம் உணர வேண்டும் தொடர் இறை பணிகள் புரிய நம்மை அர்ப்பணிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, தாய் திரு அவையின் பணியாளர்கள் அனைவரும் அழைத்த அழைப்பிற்கேற்ப எத்தனை சவால்கள், எதிர்ப்புகள், துன்பங்கள் வந்தாலும் சோர்ந்து போகாமல் உமது துணைக்கொண்டு பணிபுரிந்து வெற்றி பெற அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, எங்கள் குடும்பங்களும், சமூகமும் ஒருவருக்கு ஒருவர் உதவி புரிந்து, ஒருமனதோடு அன்புச் செய்யும் நல்லுள்ளம் கொண்டவர்களாக இவ்வுலகில் நாங்கள் இணைந்து வாழ்ந்திட வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்வின் ஊற்றே எம் இறைவா, குடிபோதைக்கு அடிமையாகி, குடும்பங்களில் ஒற்றுமையின்றி, சமாதானமின்றி வாழும் உம் பிள்ளைகளைக் கண்ணோக்கும். இத்தீயப் பழக்கத்திலிருந்து விடுபட்டு ஒற்றுமையோடும் சமாதானத்தோடும் குடும்பத்தை நல்வழியில் நடத்திச்செல்லும் ஞானத்தைத் தந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. உண்மைக்கு சான்று பகிர்ந்த இறைவா, உண்மை நேர்மை நியாயம் நீதி சமத்துவம் சகோதரத்துவம் நிறைந்த சமூகமாக நாங்கள் வாழ எங்களை உமது பராமரிப்புக்குள் வைத்து எங்களை காத்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்

## 22.10.2024 புனித இரண்டாம் ஜான்பால் திருப்பலி

**முன்னுரை** சகோ. வின்செண்ட்

அன்பின் இறைமக்களே, நாம் வாழும் இவ்வுலகில் மாற்றம் என்பது நிலையானது அது மட்டுமே மாறாதது. நம் தினசரி நிகழ்வில் மாற்றம் வரும்போது நமக்கு குழப்பம் கலந்த ஒரு புது அனுபவம் பிறக்கிறது. அந்த மாற்றம் நம்மை வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் அழைத்து செல்கிறது. அவ்வண்ணமே இயேசுவின் படிப்பினைகள் மக்கள் மத்தியில் குழப்பத்தை கொணர்ந்தாலும் வாழ்வின் முழு அர்த்தத்தையும் இறைவனின் எண்ணத்தையும் நமக்கு பாடமாக கற்பிக்கின்றது. இயேசு மக்கள் மத்தியில் மனமாற்றத்தையும் அதன் பலன்களையும் எடுத்துரைத்து

இறைவனின் அரசை உணரச் செய்தார். அதே படிப்பினையை கையில் கொண்டு இவ்வுலகில் மிக பெரிய மாற்றம் கொண்டு வந்து இறையரசை நிறுவியவர்தான் நாம் இன்று நினைவு கூறும் புனிதர் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால் மக்களின் மத்தியிலும் திருச்சபையின் கோட்பாடுகளிலும் இறையேசுவின் படிப்பினையை போதித்து அதன் வளர்ச்சியை உளமாற கண்டவர் இவர். இப்புனிதரை போன்று இறையேசுவின் படிப்பினையை உணர்ந்து ஒரு நல்ல சாட்சிய வாழ்வு வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. பாதுகாவலரே எம் இறைவா, திருஅவையின் தலைவரான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், அருட்சகோதர சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம் விழுமியங்களை உலகுக்குக் கொடுப்பவர்களாக வாழவேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. சமாதானத்தின் ஊற்றே எம் இறைவா, இந்திய நாட்டுத் தலைவர்கள் வேறுபாடின்றி பிறர்நலத்திற்கு ஒற்றுமையாக உழைக்கவும், உலக நாடுகளில் நடக்கும் போர்கள் நின்று சமாதானத்துடன் வாழவும், குடும்பங்களில் ஒருவரையொருவர் விட்டுக்கொடுத்து வாழவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நம்பிக்கையின் நாயகரே எம் இறைவா, பாவங்கள் பல செய்தவர்களாக இருந்தாலும் நம்மை மீட்டு உரிமையை கொடையாகத் தந்தவரின் விருப்பமும் தந்தை அனுப்பிய மகனின் விருப்பங்களையும், வழிகளையும் அறிந்து நல்வழி நடக்க வேண்டிய அருளையும் வல்லமையையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 24.10.2024 புனித லூயிஜி குவனெல்லா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, நம்பிக்கையோடும் ஆர்வத்தோடும் திருப்பலிக்கு வந்திருக்கின்ற உங்கள் அனைவரையும் வரவேற்கின்றோம். மண்ணுலகில்தீமூட்டவேவந்தேன் என்றவார்த்தையோடு இன்றைய நற்செய்தி வாசகம் ஆரம்பமாகிறது. ஆரம்பமே அதிர்ச்சியாக இருக்கிறது. "தீமூட்ட" இந்த வார்த்தை எதிர்மறையானது அல்ல மாறாக நேர்மறையானதும் நம்மை நேராக்க கூடியதும் இந்த வார்த்தைதான். எப்படி? நேர்மையாளர்கள் இன்னும் நேர்மையோடு வாழ, அமைதியை ஏற்படுத்துவோர் அவர்களோடு கடவுள் இருக்கிறார் என்பதை உணரவும், நல்லவர்கள் இன்னும் அதிக நன்மை செய்வதற்கான எரிபொருளாக இயேசு வந்திருக்கிறார். நம்மை தூய்மைப்படுத்தி, புத்துணர்வு அளித்து, புடமிட்டுப் புத்தொளி வீசச் செய்கின்ற பண்பையும் இயேசு மூட்டும் தீயில் நாம் காணலாம் என்பதை நாம் நினைவில் கொள்வோம். மேலும் இயேசு கொணர்கின்ற தீ நம்மை மட்டும் மாற்றுவதோடு நிற்காமல், நம்மிடமிருந்து

பிறருக்கும் பரவி, இறையாட்சியை விரிவடையச் செய்கிறது. இதற்கு நாம் கருவிகளாக மாறினால் இந்த உலகமே மாற்றுருப்பெற்று இறையாட்சிக்குச் சாட்சியாக மாறும் என்பது உறுதி. இதற்கு முன்மாதிரி காட்டி வாழ்ந்தவர் இன்று நாம் கொண்டாடும் புனிதர் ஆவார்.

இறைவனின் அழைப்பை ஏற்று, அருட்பணியாளராக தனது இறைப்பணிகளில் செபத்தினாலும், தாழ்ச்சியினாலும் தூண்டப்பெற்று உறுதியுடன் வாழ்ந்த புனிதர் லூயி குவனெல்லா அவர்களின் விழாவை இன்று கொண்டாடுகிறோம். சலேசிய ஆன்மீகம் என்பது நற்செய்தியின்படி வாழ்வதாகும். தனது கத்தோலிக்க இளையோர் இயக்கத்தை ஆரம்பித்த பின் 1875ல் தூய தொன் போஸ்கோவின் சந்திப்பு இவரைக் கவர்ந்ததால் சலேசிய சபையில் சேர்ந்தார். மூன்று ஆண்டுகள் சலேசியராக பணியாற்றும்போது, ஆயரின் அழைப்புக்கேற்ப மீண்டும் தனது மறைமாவட்டத்திற்கு திரும்பினார். தனது இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் மூன்று துறவற சபைகளையும், ஒரு பொதுநிலை பக்த சபையையும் நிறுவி கனிவான இதயத்தாலும் இறைவனில் அசைக்க முடியாத நம்பிக்கையினாலும் பிணைக்கப்பட்டு அர்ப்பணம் நிறைந்த தியாக பணிகளை செயல்படுத்தினார். அன்பர்களே, கடவுளை மாட்சிப்படுத்துவதற்கு நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம். எவ்வளவு காலம் வாழ்ந்தோம் எவ்வளவுக்கு நமது கடமையைச் சிறப்பாக செய்தோம் என்பதில்தான் நமது வாழ்வு அடங்கியிருக்கிறது. நம் வாழ்வு மூலமாக கடவுளைப் புகழ்வோம் என்பதை உணர்ந்து வாழ தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

4. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்த்தை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
5. அன்பின் ஆண்டவரே, எப்போதும் விழித்திருக்க வேண்டும் என்னும் உமது அறைகூவலுக்காக உமக்கு நன்றி. எல்லா வேளையிலும் உமது மதிப்பீடுகளைக் கடைப்பிடிக்கும் ஆற்றலை எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
6. நம்பிக்கையின் நாயகனே இறைவா, எங்கள் வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் உம் வருகை நிகழ்கிறது என்பதை நாங்கள் உணர தேவையான வரத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
7. இன்று நாங்கள் நினைவுகூறும் புனித லூயிஜி குவனெல்லாவின் பிறரன்பு பண்புகளை கடைப்பிடித்து, பிறரால் ஒதுக்கப்பட்ட, வன்முறைகளால் நொறுக்கப்பட்டவர்கள் மீண்டும் புதிய நம்பிக்கையுடன் வாழ்வை

எதிர்கொள்ளவும், நிறைவான அமைதியைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 27.10.2024 பொதுக்காலம் 30ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I எரே. 31: 7-9 II. எபி. 5: 1-6 மாற்கு 10: 46-52

பொதுக்காலத்தின் 30ம் ஞாயிறு திருப்பலியில் பங்கேற்க வந்துள்ள இறைமக்கள் அனைவரையும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்போடு வரவேற்கிறோம். விடுதலையளிக்கும் இறைவனை மீட்பர் ஆயர் தந்தை ஆகிய கோணங்களில் இன்றைய வாசகம் சித்தரிக்கிறது. இங்கே கடவுள் இஸ்ரயேல் மக்களோடு செய்துக்கொண்ட உடன்பாட்டு உறவினால் அவர், அவர்களின் தந்தையாகிறார். "இஸ்ரயேல் குழந்தையாயிருந்த போதே நாம் அவன்மேல் அன்பு கூர்ந்தோம், எகிப்திலிருந்து நம் மகனை அழைத்து வந்தோம்" என்று கடவுளுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் இருந்த தந்தை, மகன் உறவு முதல்வாசகத்தில் தெளிவுப்படுத்தப்படுகிறது. இரண்டாம் வாசகத்தில்தலைமைக்குருவானவர்மக்களிடமிருந்துதேர்ந்தெடுக்கப்பட்டு மக்களின் பிரதிநிதியாக கடவுள்முன் நிற்கிறார். தலைமைக் குருவின் முதன்மையான கடமை பாவங்களுக்காக பலி ஒப்புக்கொடுப்பதே இங்கே இயேசு தலைமைக்குருவாக செயல்படுகின்றார். இங்கு இவர் பாவம் எதுவும் செய்யவில்லை. நமது பாவங்களைப் போக்குவதற்காக தம்மையே பலியாக ஒப்புக் கொடுக்கிறார்.

நற்செய்தியில் எரிகோ வழியாக இயேசு செல்வதை அறிந்து கண்தெரியாத பர்த்தலமேயு, இயேசுவைப் பற்றி அறிந்தவனாய் தான் நிச்சயம் இயேசுமூலம் பார்வை பெறமுடியும் என்ற நம்பிக்கையின் ஊற்று அவரில் பெருக்கெடுத்து, "ஆண்டவரே, தாவீதின் மகனே, என்மேல் இரங்கும்" என்று கத்துகிறான். இயேசு அவனது மன்றாட்டுக்கு செவி சாய்த்து பார்வையளிக்கிறார். வாழ்நாள் முழுவதும் இருளில் வாழ்ந்த பர்த்திமேயுவுக்கு இயேசுவின் வருகை அவனது வாழ்வில் ஒளியேற்றுகிறது. இங்கு எரேமியா இறைவாக்கினரின் இறைவாக்கு நிறைவேறுகிறது. தன்னையறிந்து கொண்ட அந்த பர்த்திமேயு என்ற அன்பான ஆட்டினை இயேசு தன் மந்தையில் கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் ஆயனாக இங்கு சித்தரிக்கப்படுகிறார். நாமும் இயேசுவை நோக்கி கூக்குரலிடுகிறபோது நம்மேலும் ஆண்டவரின் பார்வைபடும் நமது தேவையை ஆண்டவரிடம் சொல்லும்போது கடவுள் அவற்றை கண்டிப்பாக நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையோடும், குருடான நமது அகக்கண்கள் பார்வையடையவும், நமது ஆன்மீக வாழ்வு புதுப்பிக்கப்படவும் இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஒளியின் பிறப்பிடமாகிய விண்ணகத் தந்தையே, எம் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும்

இறையன்பினாலும், பிறரன்பினாலும் திருஅவையைக் கட்டியெழுப்பி அர்ப்பண உணர்வோடு பிறரை மையப்படுத்தி இறைப்பணி செய்திடவும் இறைமக்களின் அகக் கண்களைத் திறந்து புதுப்பிக்கப்பட்ட ஆன்மீக வாழ்வுக்கு வழிகாட்ட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உலகனைத்தையம் ஆளும் உன்னத தந்தையே எம் இறைவா, நாட்டுத் தலைவர்கள் மற்றும் ஆட்சிப்பொறுப்பில் இருப்பவர்கள் யாருக்கும் பாகுபாடு காட்டாமல் ஏழைகள், தீங்கிழைக்கப்பட்டோர், கைவிடப்பட்டோர், தனிமையில் தவிப்போர் அனைவருக்கும் உரிய நலன்களை அளித்து பாதுகாத்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. "என்னிடம் மன்றாடு, உனக்கு நான் செவி சாய்ப்பேன்" என்று கூறிய இறைவா, தீரா நோய், பொருளாதாரப் பற்றாக்குறை, குடும்ப உறவில் விரிசல், தனிமை போன்றவற்றால் அவதிப்படுபவர்களுக்கு நீரே அடைக்கலமாக இருந்து, அவர்களின் மன்றாட்டுகளை நிறைவேற்றித் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. ஒப்பற்ற மருத்துவராகிய இயேசுவே, விபத்துக்களாலும், பலவிதமான பகை உணர்வுகளாலும், வன்முறையினாலும், பல உயிர்கள் மடிந்துக்கொண்டிருக்கும் இக்கொடுமைகள் நீங்கி, அனைவரும் ஒற்றுமையாகவும், அன்போடும் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 28.10.2024 புனிதர்கள் சீமோன், யூதா திருத்தூதர்கள் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

இறை இயேசுவின் பிரியமான இறைச்சமூகமே, இன்றைய தினம் இயேசுவின் சீடர்களான புனித சீமோன், யூதா, ததேயு இவர்களின் திருநாளை சிறப்பிக்க திருஅவை நம்மை அழைத்துள்ளது. புனித சீமோன், யூதேயாவில் பிறந்து ஒரு தீவிரவாதியாக இருந்து யூதர்களின் அடிமைத்தனத்தை நீக்க பாடுபட்டவர். இயேசு யூதர்களுக்கு விடுதலை வாங்கி தருவார் என்ற நம்பிக்கையால் இயேசுவின்பால் ஈர்க்கப்பட்டு சீடரான பின் இயேசுவின் நற்செய்தியில் மனம் ஈடுபட்டு இயேசுவின் தூதரானார். இவரைப்பற்றி விவிலியத்தில் லூக்கா 6:15லும், அ.ப. 1:13லும் காணமுடிகிறது. சுமார் கி.பி. 67ம் ஆண்டு, ரோம் நாட்டின், சிரியாவின் பெய்ருட் நகரில் இவரது நண்பர் புனிதர் யூதா ததேயுவின் மறைசாட்சியாக கொல்லப்பட்டார். இவர் இரம்பத்தால் இரண்டாக அறுக்கப்பட்டு மறைசாட்சியாக மரித்தார். இவரது திருப்பண்டங்கள் புனித பேதுரு பேராலயத்தில், புனித யோசேப்பு பீடத்தின் அடியில் புனித யூதா, ததேயுவின் கல்லறையோடு அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

புனித யூதா கலிலேயாவிலுள்ள யூதேயாவில் பிறந்தார். கிரேக்கம், மற்றும் அராமிக் மொழிகளில் பேசினாார். விவசாயத்தை தொழிலாகக் கொண்டவர். இருவரும் யூதேயா, சமாரியா, சிரியா, மெசபடோமியா,

லிபியா ஆகிய நாடுகளில் நற்செய்தி போதித்தார் என்று வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இவரும் புனித சீமோனோடு கோடாரியால் வெட்டப்பட்டு மரித்தார். கி.பி. 67ல் அக்டோபர் 28ல் இவர்களது நினைவுநாள் சிறப்பிக்கப்படுகிறது. இருவரும் ஒரே நாளில் கிறிஸ்து இயேசுவின் திருப்பெயருக்காக இரத்த சாட்சியாக மரித்தார்கள் என்று நம்பப்படுகிறது. எனவே, இணைப்பிரியா நண்பர்களான இவர்களின் திருநாள் ஒரே நாளில் சிறப்பிக்கப்படுகிறது. மேலும் கானாவூரில் நடந்த தண்ணீர் திராட்சை ரசமாக மாறிய நிகழ்வே புனித யூதா, ததேயுவின் திருமணமாக கருதப்படுவதாக மரபுவழி செய்திக் கூறுகிறது. கைவிடப்பட்டோர்களின் பாதுகாவலராக புனித யூதா ததேயு விளங்குகிறார். இவ்விரு புனிதர்களின் வாழ்வை நாமும் பின்பற்றி வாழ இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நற்செய்தியின் தூதுவர்களை உருவாக்கிய எம் இறைவா, உம்வழிவந்தவர்களான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவற கன்னியர் மற்றும் அனைத்து திருப்பணியாளர்கள் அனைவரும் திருஅவையின் மதிப்பீடுகளை உணர்ந்து நற்செய்தி வாழ்வில் இணைந்து செயல்பட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. நற்செய்தியின் உயிர்துடிப்பே எம் இறைவா, "அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு" என்ற திருமறையின் வார்த்தைகளை மனதிலிருத்தி குருத்துவத்தின் அவசியத்தை உணர்ந்து இன்றைய தலைமுறையினர் தேவ அழைத்தலுக்கு செவிமடுத்து வாழ, அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. திருமறையின் தலைவரே, எம் குடும்பங்களில் வாழும் வளரும் தலைமுறையினர் சாத்தானின் தீமைகளுக்கு உட்படாமல் திருமறை நூலை கையிலெடுத்து பக்தியுடன் படிக்கவும், அதன்படி செயலாற்றவும், நற்செய்தியின் நற்பண்புகளில் வளர அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 29.10.2024 புனித மைக்கேல் ரூவா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

அன்பானவர்களே, இன்று நாம் அருளாளர் மைக்கேல் ரூவாவின் நினைவு நாளைக் கொண்டாடுகிறோம். இவர் புனித தொன்போஸ்கோவின் சலேசிய சபையின் இணை நிறுவனர். இவர் 1887ம் ஆண்டு ஜீன் 8ம் நாள் இத்தாலியிலுள்ள தூரின் நகரில் ஒன்பது சகோதரர்களுள் இளையவராக பிறந்தார். அருளாளர் மைக்கேல் ரூவா ஓர் கத்தோலிக்க குருவானவர். புனித தொன்போஸ்கோவின் மாணவருள் ஒருவரும், சலேசிய சபையின் முதன்மை அதிபரும் ஆவார். இவர் கி.பி. 1845 ஆகஸ்ட் 22ல் இவரது தந்தை இறந்ததும், தாயுடன் வாழ்க்கையை

தொடங்கிய இவர் கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களில், சகோதரர்கள் நடத்திய பள்ளியில் தனது ஆரம்ப கல்வியைத் தொடங்கினார். தனது 15வது வயதில் படிப்பை முடித்தபோது கத்தோலிக்க குருவான புனித தொன்போஸ்கோ அவர்களால் தொடங்கப்பட்ட இளைஞர் அணியில் சேர்ந்தார். அப்போது தொன்போஸ்கோவும், மைக்கேல் ரூவாவும் நண்பர்களாயினர். சலேசிய சபை உருவாவதற்கு புனித தொன்போஸ்கோவிற்கு பெருமளவில் உதவி செய்தார். இளைஞர்களுக்கு ஞான மேய்ப்பராக பணியாற்றினார். 1865ம் ஆண்டு சலேசிய சபை தலைவராக பொறுப்பேற்றார்.

தொன்போஸ்கோவின் எல்லா பயணங்களிலும் உடனிருந்து நல்ல தோழராக இருந்தார். இவருக்கு திருத்தந்தை ஆறாம் பவுல் 1992ல் அக்டோபர் 29ம் நாள் முத்திபேறு பட்டம் வழங்கினார். அருளாளர் மைக்கேல் ரூவாவின் நினைவு நாளை சிறப்பிக்கும் நாம், இவரைப்போல இறைவார்த்தையை பறைசாற்றிடவும், இளைஞர்களுக்கு இயேசுவின் அன்பையும், மகத்துவத்தையும் எடுத்துரைக்கவும் இறைவனிடம் நம்பிக்கையும் இளையோர் மனதில் நிலைக்கச் செய்யும் நல்ல ஞானமேய்ப்பர்களாக செயல்பட இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், பொதுநிலையினர் அனைவருக்கும் நல்ல ஆன்ம நலனளித்து தூய அவியானவரால் வழிநடத்தவும், திருஅவையின் வளர்ச்சிக்காகவும், மேன்மைக்காகவும் உழைத்திடும் ஆர்வமும், ஊக்கமும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கமே உருவான இறைவா, உம்முடைய அன்பையும், இரக்கத்தையும், பாதுகாப்பையும், பராமரிப்பையும் நாங்கள் உம்மை அறியாதோருக்கு எடுத்துரைக்கும் தைரியத்தையும், தூய ஆவியாரின் வல்லமையையும் அளித்து எம் இளையோரையும், சிறு குழந்தைகளையும் வழிநடத்த வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. நலமளிக்கும் நல் இறைவா, உமது பாதுகாப்பில் நாங்கள் அனைவரும் நலமுடன் வாழவும், இன்றைய நாட்களில் பலவிதமான தொற்றுநோயினால் அவதியுறுவோர் நலம்பெறவும், இயற்கை சீற்றத்தினால் ஏற்பட்ட இழப்புகளை சரிசெய்யவும், அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அளிக்கக் கூடிய நல்லுள்ளம் கொண்டவர்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## புனித லூக்கா, சீமோன், யூதா குறிப்பு அறிவோம்

திரு. பி. விக்டர்

**புனித லூக்கா :** இவர் அந்தியோக்கியா நகரில் பிறந்து வளர்ந்தார். இவர் மிகச் சிறந்த மருத்துவரானகவும், கல்வியாளராகவும் விளங்கினார். அந்நாட்களில் வரலாற்று நூல்களைப் படைப்பதில் திறன்மிக்கவராக இருந்தார். கிரேக்க மொழியில் புலமைப்பெற்ற இவர் தனது படைப்புகளை கிரேக்க மொழியிலேயே எழுதியுள்ளார். ஆண்டவர் இயேசுவின் வரலாற்றைக் கூறும் லூக்கா நற்செய்தி நூலும் கிரேக்க மொழியில்தான் எழுதப்பட்டுள்ளது. அதுபோலவே தொடக்ககாலத் திருஅவையின் நிகழ்வுகளையும் பணி வாழ்வையும், கிரேக்க மொழியில் தெளிவான நடையில் எல்லோரும் எளிதில் புரிந்துக்கொள்ளும் விதமாக விளக்கமாக எழுதியுள்ளார். இவர் ஒரு மருத்துவம் என்று திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இவர் மருத்துவம் பார்த்ததாக எங்கும் தெரிவிக்கப்படவில்லை.

இயேசுவின் பன்னிரெண்டு திருத்தூதர்களில் ஒருவர் அல்ல, ஆனால் இயேசுவின் 72 சீடர்களில் ஒருவராக இருக்கலாம் என்பது திருவிவிலிய அறிஞர்களின் கருத்து, அதுபோல உயிர்த்த இயேசுவோடு, "எம்மாவுஸ்" சென்ற சீடர்களில் ஒருவராக இருக்கலாம் என்று திருவிவிலிய அறிஞர்கள் நம்புகின்றனர். இவர் புனித பவுலோடு சேர்ந்து நற்செய்தி பணியாற்றியதாக குறிப்பிடுகிறார். இவர் எழுதிய லூக்கா நற்செய்தி நூல் ஆண்டவர் இயேசுவின் பிறப்பு நிகழ்விலிருந்து அவரது விண்ணேற்பு நிகழ்வுவரை மிகத் தெளிவான நடையில், படிக்கின்ற யாவரும் எளிதில் புரிந்துக்கொள்ளும் விதமாக எழுதப்பட்டுள்ளது. புனித லூக்கா தனது பணிவாழ்வை நிறைவு செய்து தனது 84வது வயதில் கிறிஸ் நாட்டில் இரத்தச் சாட்சியாக இறந்தார்.

**புனித யூதா :** அவர்கள் ஆண்டவர் இயேசுவின் பன்னிரெண்டு சீடர்களில் ஒருவராவார். இவரது பெயரை "யூதா" என்றும் "யூதாஸ்" என்றும் மொழிப்பெயர்க்கலாம். இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் ஸ்காரியோத்தை வேறுபடுத்திக்காட்ட இவரை "யூதா ததேயு" என்றோ அல்லது யூதா பெருசாயுஸ் என்றோ அழைப்பது வழக்கம். இவர் கி.பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் பாலஸ்தீனத்தில் உள்ள கலிலேயாவில் பிறந்தார். இவர் கிரேக்க மொழியும், அரமேயு மொழியும் அறிந்தவர். உழவுத் தொழிலைச் செய்துவந்தவராக திருமறை அறிஞர்கள் நம்புகின்றனர். ஆண்டவர் இயேசுவோடு திருத்தூதராக இணைந்திருந்த இவர், இயேசுவின் விண்ணேற்புக்குப் பிறகு மற்ற திருத்தூதர்களோடு இணைந்து தூய ஆவியின் அருள்பொழிவுக்குப் பிறகு தனது பணிவாழ்வைத் தொடர்ந்தார். எருசலேம் நகரில் ஏற்பட்ட கிறிஸ்தவர்களுக்கு எதிரான கலவரத்திற்குப் பிறகு யூதேயா, சமாரியா,

சிரியா, மெசபடோமியா, அர்மினியா மற்றும் லிபியா போன்ற நாடுகளில் நற்செய்தி அறிவித்து அநேகரை கிறிஸ்தவராக்கினார். பர்த்தலமேயுவோடு இணைந்து பணியாற்றினார்.

இவர் எழுதிய "யூதா" கடிதம் திருவிவிலியத்தில் உள்ள மிகச்சிறிய நூல்களில் ஒன்று, இந்நூல் அனைத்து கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டுள்ளது. பேதுரு எழுதிய அவரது இரண்டாம் கடிதத்தோடு தொடர்புடையதாக விளங்குகிறது. இவர் தன்னைக் குறித்துக் குறிப்பிடும்போது "இயேசு கிறிஸ்துவின் பணியாளனும் யாக்கோபின் சகோதரராகிய யூதா" என்று குறிப்பிடுகிறார். போலிப் போதகர்களின் தவறான போதனைகளால் ஏற்படும் ஆபத்துகளிலிருந்து காத்துக்கொள்ள இக்கடிதத்தை எழுதினார். மத்தேயு 13:55ல் கூறியுள்ளபடி இயேசுவின் சகோதரர் "யாக்கோபு, யோசேப்பு, சீமோன், யூதா அல்லவா" என்கிற பகுதியில் உள்ளபடி "யூதா" இயேசுவின் சகோதரர் என்று இவர் குறிப்பிடுவர். இவர் கி.பி. 67ம் ஆண்டு லெபனானில் (இன்றைய ஈரான்) கோடாரியால் வெட்டப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தார்.

**புனித சீமோனின் - தீவிரவாதி :** ஆண்டவர் இயேசுவின் பன்னிரண்டு திருத்தூதர்களில் ஒருவரான "புனித சீமோன்" அவர்கள் "தீவிரவாதி சீமோன்" என்று அழைக்கப்படுகிறார். ஆண்டவர் இயேசுவை சந்திக்கும் முன்புவரை இவர் தமது பகுதியில் இயங்கிவந்த நாட்டுப்பற்று மிக்க "தீவிரவாத இயக்கத்தில்" இருந்தார். இயேசுவை சந்தித்தப்பின்பு அவர் அந்த தீவிரவாத இயக்கத்திலிருந்து விலகி இயேசுவோடு இணைந்துக்கொண்டார். அதனால்தான் லூக்கா தனது நற்செய்தியில் 6ம் அதிகாரத்தில் திருத்தூதர்களில் பெயர் பட்டியல் எழுதும்போது இவரை "தீவிரவாதியான சீமோன்" என்ற அடைமொழியுடன் குறிப்பிடுகிறார்.

ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்புக்குப் பிறகு இயேசுவின் கட்டளைக் கிணங்க எருசலேமில் ஒரு மாடியறையில் கூடி செபித்த நூற்று இருபது நபர்களோடு இவரும் இருந்ததை தி.ப.1:13 வசனத்தில் திருத்தூதர் தீவிரவாதி சீமோன் என்று குறிப்பிடுகிறது. எகிப்து, பெர்சியா (ஈரான்) மத்திய கிழக்கு நாடுகளில் நற்செய்தி அறிவித்த இவர் திருத்தூதர் யூதாவோடு இணைந்து பணியாற்றினார். இறுதியில் கி.பி. 65க்கு பிறகு இன்றைய ஈரான் நாட்டில் ரம்பத்தால் இரண்டாக வெட்டப்பட்டு இரத்த சாட்சியாக இறந்தார். இவரது நினைவு திருவிழாவை ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் 18ம் தேதி கொண்டாடப்படுகிறது.

## யார் இந்த செபமாலை அன்னை?

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

இறையேசுவின் அன்பர்களே, அக்டோபர் மாதம் தொடங்கினாலே கத்தோலிக்கர்கள் அனைவருக்கும் செபமாலைதான் நினைவுக்கு வருகிறது. செபமாலை என்பது கத்தோலிக்கர்களின் அன்றாட வாழ்வில்

செபிக்கப்படும் செபமாக இருக்கின்ற பொழுது, அக்டோபர் மாதத்திற்கு மட்டும் ஏன் இந்த தனிச்சிறப்பு? பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் இருந்து கிறிஸ்தவத்தை அழித்து இஸ்லாம் மதத்தை நிறுவும் முனைப்புடன் முன்னேறிக் கொண்டிருந்த துருக்கியரின் படைகள், செபமாலையின் வல்லமையால் தோல்வியுற்று மிரண்டோடிய மாதம் அக்டோபர் மாதமாகும். திருஅவை எப்போதெல்லாம் எதிரிகளால் சோதனைக்கு உள்ளாகிறதோ, அத்தகையத் தருணங்களில் இறையன்னையின் உதவியைத் தவறாமல் வேண்டி வந்திருக்கிறது. கிறிஸ்தவர்களின் பாவத்தினால் இந்த சோதனைகள் வந்திருந்தாலும், பாவிகளின் தஞ்சமாகிய அன்னை மரியா கடவுளின் மேன்மையை நிலைநாட்டும் பொருட்டு எப்பொழுதும் தவறாமல் கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்து வந்திருக்கிறார். ஆகவேதான், கிறிஸ்தவர்களிடம் இருந்து அன்னை மரியாவைப் பிரிக்க சாத்தான் சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிறது.

விசுவாசம் மட்டும்போதும், விவிலியம் மட்டும் போதும் என்று பேசும் சீர்திருத்தக் கிறிஸ்தவர்கள் அன்னை மரியாவைப் பிரிந்திருப்பது தங்களது ஆன்மாவுக்கு ஆபத்தானது என்பதை உணர்வதில்லை. கடவுளிடம் இருந்து நேரடியாகவே விவிலியத்தைப் பெற்றது போன்று, வசனங்களுக்கு விளக்கம் அளித்துத் திரியும் பெந்தக்கோஸ்து கிறிஸ்தவர்களும் தீய ஆவியோடே கரம் கோர்த்திருக்கின்றனர். செபம், ஆராதனை என்ற பெயரில் நடைபெறும் அட்டகாசகங்களே, அவர்கள் சபையில் கடவுள் இல்லை என்பதற்குச் சான்று. அன்னை மரியாவை முட்டையோடு என்றும், சமையல் பாத்திரம் என்றும் வருணிக்கும் அவர்களை நம் ஆண்டவர் விண்ணகத்தில் வரவேற்பார் என்ற நம்பிக்கை எனக்கில்லை. "உன் தாய், தந்தையை மதித்து நட" என்றக் கட்டளையை வழங்கிய கடவுள், தமது தாய் குறித்து இகழ்ந்து பேசியவர்களை மன்னிப்பார் என்று அவர்கள் எப்படி எதிர்பார்க்கின்றனர். "உன்னைப்போல் பிறரையும் அன்பு செய்வாயாக" என்ற கடவுளின் கட்டளையைப் பின்பற்ற இயலாத அவர்களால், இறப்புக்குப் பிறகு விண்ணகத்தில் நுழைய முடியுமா?

புனிதர்கள் விண்ணக மாட்சியில் இருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் நம்மோடு தோழமை கொண்டு நமக்காக கடவுளிடம் பரிந்து பேசுகிறார்கள் என்பதையும் நம்ப முடியாத கிறிஸ்தவர்கள், கடவுளின் ஆட்சி மண்ணகத்தில் வருவதற்கு எப்படி உழைக்க முடியும்? இயேசு கற்பித்தப் போதனைகளையும், அவர் நிறுவியத் திருஅவையையும் புறந்தள்ளி விட்டு, கத்தோலிக்கர்கள் பாவிகள் என்று பேசிக் கொண்டிருக்கின்றனர். கடவுளின் திட்டம் புரியாமல், புனிதர்களின் வணக்கத்தை சிலை வழிபாடு என்று குறைகூறி வருகின்றனர். கத்தோலிக்கத் திருஅவை இத்தகையப் போலிக் கிறிஸ்தவர்களின் விமர்சனங்களைப் பெரிதாகக் கருதவில்லை என்றாலும், அவர்களும் மனந்திருந்தி விண்ணகம் சேர வேண்டும் என்றும் செபிக்கிறது. பசித்தோருக்கு உணவும், தாகமுற்றோருக்கு

நீரும், வருந்துவோருக்கு ஆறுதலும், துன்புறுவோருக்கு அருகிருப்பும் வழங்குவதே கிறிஸ்தவப் பிறரன்பு. தேவைகளில் உள்ள மக்களுக்கு நன்மை செய்வதே கடவுளுக்கு ஆற்றும் தொண்டு என்பதே இறைமகன் இயேசு இறுதித் தீர்ப்பு குறித்து நமக்கு வழங்கியுள்ளத் தெளிவானப் படிப்பினை.

கடவுளை மையப்படுத்தி, மற்றவருக்கு நன்மை செய்கின்ற ஒரு கருவியாக செபமாலை திகழ்கிறது என்பது உறுதி. செபமாலை கொண்டு நாம் செபிக்கின்ற செபங்கள் பாவிகளும், பதிதர்களும் மனந்திரும்புவதற்கு ஒப்புக் கொடுக்கப்படுகின்றன. நமக்காகவும் பிறருக்காகவும் நாம் செபமாலை செபிக்கின்றபோது அது கடவுளுக்கு விருப்பமான செபமாக அமைகின்றது. கிறிஸ்துவின் மறைபொருள்களைத் தியானித்து, அன்னை மரியாவின் பரிந்துரையை வேண்டும் பொழுது நாம் மண்ணக நலன்களோடு, விண்ணக வரங்களையும் பெறுகின்றோம். ஆண்டவர் இயேசுவின் அன்னை மரியாவுக்கு கத்தோலிக்கத் திருஅவை வழங்கும் பல பெயர்களில் "செபமாலை அன்னை" என்பதும் ஒன்றாகும். செபமாலை கொண்டு வேண்டப் பெறுவதாலும், அதற்கு செவிசாய்த்து வரங்களைப் பெற்றுத் தருவதாலும் அன்னை மரியாவை செபமாலை அன்னை என்று அழைக்கிறோம். கி.பி. எட்டாம் நூற்றாண்டில் இருந்தே மங்கல வாழ்த்து (அருள் நிறைந்த மரியே) செபத்தைப் பலமுறை சொல்லி அன்னை மரியாவை வாழ்த்தி, அவரது உதவியை நாடும் வழக்கம் கத்தோலிக்கர் பலரிடம் இருந்தது.

பதிமூன்றாம் நூற்றாண்டில், ஆல்பிஜென்ஸ் பிரிவினரின் தப்பறைகளை முறியடிக்க இந்த செபத்தைப் பயன்படுத்துமாறு புனித தோமினிக்கை அன்னை மரியா வலியுறுத்தினார். அதுவரை தவறான போதனைகளை நம்பிய மக்களும், செபமாலை பக்தியால் மனந்திரும்பி கத்தோலிக்கம் தழுவினர். 1464ல் அருளாளர் ஆலன் தெ ரோச், மகிழ்ச்சி, துயரம் மற்றும் மாட்சியின் 15 மறையுண்மைகளை வெளியிட்டார். 1569ல் திருத்தந்தை புனித 5ம் பயஸ் அதிகாரப்பூர்வ செபமாலை பக்தியை கத்தோலிக்கத் திருச்சபையில் நிறுவினார். 1570ல் துருக்கிய இஸ்லாம் படைகளுக்கு எதிராக, ஐரோப்பிய கிறிஸ்தவ படைகள் கடுமையானப் போரில் ஈடுபட்டனர். அக்டோர் 7ந்தேதி, போரில் வெற்றிபெற வேண்டி ரோமில் திரளானோர் ஒன்றுகூடி செபமாலை செபிக்கவே மரியன்னையின் வல்லமையால் கிறிஸ்தவப் படைகள் வென்றன. அதைக் கொண்டாடும் விதமாக, திருத்தந்தை 5ம் பயஸ் "வெற்றியின் அன்னை" என்ற பெயரில் ஒரு விழாவை ஏற்படுத்தினார். 1573ல் திருத்தந்தை 13ம் கிரகோரி, இதற்கு "திருச்செபமாலை விழா" என்று புதியதொரு பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

1883ல் திருத்தந்தை 13ம் லியோ, அக்டோபரை செபமாலை மாதமாக அறிவித்தார். 1917ல் போர்த்துகல் நாட்டின் பாத்திமாவில் காட்சியளித்த அன்னை மரியா, "நான் செபமாலை அன்னை" என்று

தம்மை அறிமுகம் செய்து கொண்டார். இதன் பேரில், அக்டோபர் 7ந்தேதி விழாவுக்கு "செபமாலை அன்னை விழா" என்றப் பெயரை திருத்தந்தை 23ம் யோவான் 1960ல் வழங்கினார். 2002-2003ல் செபமாலை ஆண்டை அறிவித்த திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல், புதிதாக ஒளியின் மறையுண்மைகளை செபமாலையில் அறிமுகம் செய்தார். இவ்வாறு, ஆண்டவர் இயேசுவின் அன்னை மரியா நூற்றாண்டுகள் தோறும் செபமாலை அன்னையாகத் திகழ்ந்து வருகிறார். நமது துன்ப நேரங்களில் அடைக்கலமாக, சகாயமாகத் திகழுமாறு இறைமகன் இயேசு தமது அன்னையை நமக்குத் தந்துள்ளார். தொடக்கத் திருஅவை அன்னை மரியாவின் அரவணைப்பிலேயே பிறந்து வளர்ந்தது என்பது விவிலியம் நமக்கு கற்பிக்கும் பாடம். நாமும் செபமாலை வழியாக மரியன்னையின் கைகளைப் பிடித்து நடந்தால் இவ்வுலகிலும் மறுவுலகிலும் வரும் தீமைகளுக்கு அஞ்சாமல் வாழலாம்.

## அருளாளர் அலெக்ஸான்ட்ரீனா மரியா வாழ்வின் பாடம் அறிவோம்

திரு. ஜான் அலெக்ஸ்

போர்த்துக்கல் நாட்டின் பாலசார் என்னும் கிராமத்தில் 1904ம் பிறந்த இவரின் வாழ்வினை இரண்டு பகுதிகளாகப் பரித்து பார்க்கும் போது, 19 ஆண்டுகள் மகிழ்ச்சியாக ஆடிப்பாடிய உல்லாச வாழ்வும் 32 ஆண்டும் இயேசுவின் பாடுகளோடு தனது சிலுவைகளை, மகிழ்வோடு சுமந்த வாழ்வும் வெளிப்படுகிறது. தனக்கு 6 வயதானபோது மறைக்கல்வி கற்று, ஏழாவது வயதில் புதுநன்மை வாங்கியவர். ஆலயங்களில் வைத்துள்ள திருசுரூபங்களை சென்று பார்ப்பது இவருக்கு மிகவும் பிடித்த ஒன்று. குறிப்பாக அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும் மரியன்னை, சூசை இவர்களின் திருச்சுரூபங்களை கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டே இருப்பார். "இது என் தற்பெருமையின் வெளிப்பாடு, நான் புனிதர்களின் புனிதத்துவத்தை பற்றி அவ்வளவு சிந்திப்பதில்லை. சின்ட்ரில்லாவைப் போல் பல ஏழைப் பெண்களும், அரசகுமாரர், அரண்மனை என்று ஆடம்பர வாழ்வை பற்றி சிந்திப்பது போல நானும் கனவு கண்டு கொண்டிருக்கிறேன்" என்று இவரே எழுதியதை நம்மால் காணமுடிகிறது.

**இளம் புயல் :** அலெக்சாண்ட்ரீனா மிக சுறுசுறுப்பானவர், துடுக்குத்தனம் மிக்கவர். சின்ன மான் குட்டியை போல இங்கும் அங்கும் ஓடுவதும் ஆடுவதுமாய் இருப்பவர். அன்றாட வாழ்வில் நடக்கும் வேடிக்கை நிகழ்வுகளை கண்டு மகிழ்வார். ஒருமுறை ஆலயத்தில் செபித்துக்கொண்டிருக்கும் இருவரின் மேலாடைகளை முடிச்சுப்போட, அவர்கள் அதை அவிழ்க்க முடியாமல் தவித்ததைக் கண்டு சிரிப்புடன் வெளியே ஓடிவந்தார், ஆகவே இவரின் குறும்புத்தனத்துக்கு எல்லையே கிடையாது. அவர் எப்போதும் மகிழ்ச்சியாய் இருப்பார். அதோடு தன் கடமையில் கண்ணும் கருத்துமாய் இருப்பார். விறகுக் கட்டைகளை உடைப்பதும், நீரோடைக்கு சென்று துணிகளைத் துவைப்பதும் அவரது

பொழுதுபோக்கு. "தூய்மை" என்பது அவரோடு ஒட்டிப்பிறந்த பண்பு என்றால் அது மிகையல்ல. தூய்மையற்ற ஆன்மாவையும் உடலையும் இறைவன் ஒருபோதும் விரும்புவதில்லை என்பதில் உறுதியாய் வாழ்ந்தார்.

**குடும்ப பாரத்தை தாங்கும் சுமைதாங்கி :** தன் 13வயதில் கடுமையாக உழைக்கும் தன் தாயோடு பணிக்கு சென்றார். தாய்க்கு நிகராக திறமையோடு பணியாற்றியதால் இவருக்கு பெரியவர்களுக்கு கொடுக்கப்படும் அதே கூலி தரப்பட்டது. பலம்வாய்ந்தவர்களைப் போல பலுவான சோள மூட்டைகளைத் தானே தனியாக தூக்கி செல்வார். இதனால் மணமான ஒருவன் இவரிடம் தகாதமுறையில் நடந்து கொண்டதால் துணிச்சலோடு ஓங்கித் தாக்கினார். வேறொரு முறை பணக்கார இளைஞன் இவரைத் தன வலைக்குள் இழுக்க முயற்சித்துத் தோல்வி கண்டான்.

**செதுக்கி வைத்த அழகுச்சிலை :** அலெக்சாண்ட்ரீனாவிற்கு 14 வயது, அழகுப் பொலிவுடன் திகழ்ந்தவர், தன் தங்கையுடனும் தோழியுடனும் வீட்டில் இருந்தார். தன்னிடம் அறை வாங்கியவன் இரு கூலியாட்களோடு வீடு புகுந்தான். அனைவரும் ஒடி மறைந்துகொண்டனர். இருப்பினும் அவர்கள் அலெக்சாண்ட்ரீனா மீது தங்கள் கண்களை திருப்பினார்கள். உடனே இவர் பக்கத்திலிருந்த சன்னல் கதவு வழியாக மாடியிலிருந்து குதித்தார். பிறகு அங்கிருந்த ஒரு கட்டையை எடுத்துக் கொண்டு அவர்களை அடித்து தன் தங்கை மற்றும் தோழியை காப்பாற்றியவருக்கு சொல்ல முடியாத அளவு முதுகு வலி. படுத்தவர் மீண்டும் எழவே முடியவில்லை. வேதனையோடு பல தூரம் சென்று சிகிச்சை பெற்றுவந்தார். இறைவனை நோக்கி பக்தியோடு தனக்கு நற்சுகம் கிடைத்தால் வாழ்நாளெல்லாம் தான் அணியும் அழகிய ஆடைகளுக்கு பதில் எளிய உடைகளை உடுத்துவதாக வாக்குறுதி தந்தார். இருப்பினும் அவரது உடல்நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வந்தது. காலப்போக்கில் அலெக்சாண்ட்ரீனாவிற்கு தான் சுகம்பெற வேண்டும் என்பதை விட இயேசுவுக்காக, ஆன்மாக்களை மீட்பதற்காகவே தனது துயரங்களை ஒப்புக்கொடுத்தார்.

**இயேசுவின் திருப்பாடுகளில் அலெக்சாண்ட்ரீனா :** பாவிகளின் மனமாற்றத்திற்காகவும் உலக அமைதிக்காகவும் பயனற்ற தன் உடலை மறை உடலாக மாற்றி பலிப் பொருளாக இறைவனுக்கு கையளித்தார். துன்பப்படுவதும் பரிகாரம் செய்தலும் அன்பின் வெளிப்பாடு என்று இயேசு அவருக்கு உணர்த்தினார். 1936ல் "எனக்காக ஆன்மாக்களைக் காப்பாற்று" என்ற இயேசுவின் குரல் அவருக்கு கேட்டது. 1938ல் தன் உடலில் இயேசுவின் பாடுகளை முதன் முதலாய் அனுபவித்தார். அதுமுதல் 1942 வரை ஒவ்வொரு வெள்ளியன்றும் 3 மணி நேரம் இயேசுவின் பாடுகளை தன் உடலில் அனுபவித்தார். 1942ம் ஆண்டு இவருக்கு இறுதி அருட்சாதனம் நிறை வேற்றப்பட்டது. அதுமுதல் 1955 அக்டோபர் 13ம் நாள் வரை நற்கருணை ஒன்றையே உணவாக அருந்தினார். திருத்தந்தை

12ம் பத்திநாதரிடம் இவ்வுலகை மரியன்னையின் மாசற்ற இருதயத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென விண்ணப்பித்தார். அவ்வாறே திருத்தந்தை 1942 அக்டோபர் 31ம் நாள் அதை நிறைவேற்றினார். 1944ல் அருட்பணி உம்பெர்தோ பாஸ்குவாலே என்னும் சலேசிய குருவானவர், இவர் இறக்கும் வரை ஆன்ம குருவாக இருந்து வழிநடத்தினார்.

**ஒரு சலேசிய உடனுழைப்பாளர் :** அலெக்சாண்ட்ரீனா 1945ல் சலேசிய உடனுழைப்பாளராக படுக்கையிலேயே தன்னை அர்ப்பணித்து வாக்குறுதி எடுத்துக்கொண்டார். அருட்பணி உம்பெர்தோ, "சலேசிய குடும்பத்தில் ஒரு நபராக இருந்து, ஆன்மாக்களின் மீட்புக்காகவும் குறிப்பாக இளையோரின் வாழ்வு மலரவும், உலகிலுள்ள அனைத்து சலேசிய உடனுழைப்பாளர்களின் மீட்புக்காக செபிக்கவும், துன்பங்களை அனுபவிக்கவும் இந்த குடும்ப அடையாள அட்டை வழங்கப்பட்டது" என்று எழுதியிருந்த அடையாள அட்டையை கொடுத்தார். தொன் போஸ்கோவின் பணியினை இவ்வுலகில் தொடரப் பயிற்சி எடுக்கும் துறவற பயிற்சியாளர்களின் துன்புறும் சகோதரியாக விளங்கினார்.

**விண்ணிலே நாம் சந்திப்போம் :** 1955 மே 6ல் அமல அன்னை இவருக்கு தோன்றி, "சில நாட்களில் உன்னை நான் அழைத்துச் செல்வேன்" என்று கூறியபடியே அதே மாதம் 13ம் நாள் அமல அன்னை அலெக்சாண்ட்ரீனாவை அழைத்துச் சென்றார். அப்போது "பாவம் செய்யாதீர், அடிக்கடி நற்கருணை உட்கொள்ளுங்கள், அன்றாடம் செபமாலை செபியுங்கள், விண்ணிலே நாம் சந்திப்போம் செல்கிறேன்" என்று சொல்லி, இன்றிலிருந்து பாலசார் ஒரு திருயாத்திரை இடமாக மாறும் என்று கூறி கண்களை மூடினார். இன்றும் ஏராளமான வாகனங்கள், திருப்பயணிகள், பாலசாரின் நெருக்கமான தெருக்களில் வந்த வண்ணமாக இருக்கின்றன. திருத்தந்தை 2ம் ஜான் பால் அவர்களால் 2004ல் அலெக்சாண்ட்ரீனாவிற்கு அருளாளர் நிலை வழங்கப்பட்டது.

**நிறைவாக :** சலேசிய சபையின் மேனாள் தலைவர் பேரருட்பணி பாஸ்குவால் பின்வருமாறு எழுதுகின்றார், "திருத்தூதுவ பணிக்காக தம்மை அர்ப்பணித்துள்ள இத்தகைய தெய்வீக மக்கள், தாங்கள் விரும்பாமலே அனைவராலும் போற்றப்படுகின்றார்கள். அவர்கள் அனுபவிக்கும் வேதனை நம்மால் புரிந்து கொள்ள முடியாது"

## திருஅவைச் செய்திகள்

திரு. சாண்டோ

### மொழி, கலாச்சாரத்தை ஊக்கப்படுத்தும் கிறிஸ்துமஸ் போட்டி

இளைஞர்களின் பணியானது, வெவ்வேறு வழிகளில் வார்த்தை மனுஉருவான அன்பின் மறைபொருளை, ஈர்ப்பை, பாடல் மற்றும் இசையின் வழியாக வெளிப்படுத்துகின்றது. கிறிஸ்துமஸ் போட்டி 2024 என்னும் மாபெரும் இயக்கத்தின் ஒரு பகுதியாக, உண்மைத்

தன்மையாக பங்கேற்பாளர்கள் அனைவரும் இருக்கின்றார்கள் என்றும், அவர்களின் கதைகள் மற்றும் குரல்களின் வழியாக கடவுளின் அன்பு, இயேசு கிறிஸ்துவில் மனிதனாக உருவாக்கப்பட்டு, எப்போதும் மனித இதயங்களுக்குள் பேசுகிறது என்றும் எடுத்துரைத்துள்ளார் இளைஞர்களின் திறமையும் படைப்பாற்றலும் நமக்குத் தேவை, அவர்கள் பணம் அல்லது வெற்றியின் சிலைகளால் அல்ல, மாறாக அழகு, உடன்பிறந்த உறவு, நம் வாழ்க்கையைக் காப்பாற்றி அதற்கு அர்த்தத்தைத் தரும் இயேசுவுக்காக தூண்டப்படுகிறார்கள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார் திருத்தந்தை.

**மக்கள் யாரும் போரை விரும்பவில்லை - லெபனோன் பேராயர்**

"போரினையும், இரு நாடுகளுக்கு இடையேயான மோதல் தீவிரமடைவதையும் மக்கள் யாரும் விரும்பவில்லை. இந்த கடினமான சூழலிலும் அப்பகுதியில் தங்கியிருக்கும் கிறிஸ்தவ மக்கள் இறை வேண்டலில் நிலைத்திருக்கின்றனர்" - பேராயர் சார்பெல் அப்துல்லா. இஸ்ரேல் தங்கள் படையின் ஒரு பகுதியினரை லெபனோனின் வடக்கு நிலப்பரப்பில், மீண்டும் நிலைநிறுத்துவதற்கான இஸ்ரேலின் அறிவிப்பானது, இஸ்ரேலுக்கும் லெபனோனுக்கும் இடையே ஒரு பெரிய அளவிலான போரின் அச்சத்தை மீண்டும் ஏற்படுத்தியுள்ளது என்றும் கூறியுள்ளார் பேராயர் அப்துல்லா.

**சமத்துவமின்மையே சமூக சீர்கேடுகளுக்குக் காரணம் - திருத்தந்தை**

பொருளாதார வளர்ச்சியின் பலன்கள் சரியாக பகிர்ந்தளிக்கப் படவில்லை என்றால், அது இன்னும் பெரிய ஆபத்துகளை உருவாக்கும் என்பது வெளிப்படையான உண்மை - திருத்தந்தை பிரான்சிஸ். திருஅவை அனைவருக்குமானது, நற்செய்தியில் குறிப்பிடப்படும் ஏழைகள் வாழ்வின் மையத்தை எடுத்துரைக்க வேண்டியது நம் அனைவரின் கடமை, தூய நற்செய்தி என்றும், சமத்துவமின்மையே சமூகச் சீர்கேடுகளுக்குக் காரணம் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். சமூக நீதி என்பது திருஅவையால் உருவாக்கப்பட்ட ஒரு வெளிப்பாடு. அது இரக்கத்திலிருந்து பிரிக்க முடியாதது என்றும், கடவுளுடைய மூன்று பண்பு நலன்களான உடனிருப்பு, இரக்கம், அன்பு ஆகியவற்றுடன் எப்போதும் இணைந்து செல்ல வேண்டும் என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.

**அமைதி மற்றும் ஒன்றிப்பின் செய்தியை எடுத்து செல்லும் திருத்தந்தை**

லக்ஸம்பர்க் மற்றும் பெல்ஜியம் நாடுகளுக்கான திருப்பயணத்தில், "ஐரோப்பிய கலாச்சாரத்திற்கு கிறிஸ்தவம் என்ன சொல்ல வேண்டும்" என்பது பற்றிய சிந்தனைகளை வழங்க உள்ளார் திருத்தந்தை. இத்திருப்பயணத்தின்போது அமைதி, புலம்பெயர்வு, காலநிலை மாற்றம், இளையோரின் எதிர்காலம் உள்ளிட்ட பல்வேறு கருப்பொருள்களில் உரையாற்றுவதுடன், திருத்தந்தை அவர்கள் திருஅவை சந்திக்கும் பிரச்சனைகளிலும் கவனம் செலுத்துவார் என்றும் கூறினார் அவர்.

1425ஆம் ஆண்டு நிறுவப்பட்ட Louvain கத்தோலிக்க பல்கலைக்கழகத்தின் 600வது ஆண்டு நிறைவை முன்னிட்டும் இந்த திருத்தூது பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார் மத்தெயோ புரூனி. "ஐரோப்பிய கலாச்சாரத்திற்கு இன்னும் கிறிஸ்தவம் என்ன சொல்ல வேண்டும்" என்பது பற்றிய சிந்தனைகளை திருத்தந்தை அவர்கள் வழங்குவதற்கான வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார் திருப்பீடப் பேச்சாளர்.

**மணிப்பூரில் அமைதியை நோக்கிய இந்திய அரசின் திட்டங்கள்**

மணிப்பூர் கலவரத்தால் 230க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்தனர். 60,000 மக்கள் தங்கள் பகுதிகளை விட்டு வெளியேறியுள்ளனர், அவர்களில் பெரும்பாலானோர் கிறிஸ்தவர். இந்தக் கலவரத்தால் 16 மாதங்களாக போராடிவரும் இந்து மற்றும் கிறிஸ்தவர்களின் அமைதிக்கான, மத்திய அரசின் புதிய பரிந்துரை திட்ட வரைவுகள் குறித்து கிறிஸ்தவத் தலைவர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர் என்று UCA செய்தி நிறுவனம் தெரிவிக்கறது. தேசிய தலைநகர் புது தில்லியில் செப்டம்பர் 17அன்று செய்தியாளர் கூட்டத்தில் உரையாற்றிய மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள், மணிப்பூரில் அமைதிக்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், புதிய அமைதி பரிந்துரைகள் தயாராக உள்ளது என்றும் கூறினார்.

குக்கி மற்றும் மேத்தி இனக் குழுக்களிடையே அமைதிக்கான பேச்சு வார்த்தை நடைபெற்று வருவதாகவும் கூறிய இந்திய உள்துறை அமைச்சர் அது குறித்த விவரங்களை வெளியிட மறுத்துவிட்டதாக செய்தி நிறுவனம் கூறுகிறது. கடந்த ஆண்டு மே மாதம் 3 ஆம் தேதி கலவரம் தொடங்கிய உடனேயே இவ்வன்முறையை எதிர்கொள்ள, இந்திய அரசு செயலூ க்கமான நடவடிக்கைகளை எடுத்திருந்தால், நலமாய் இருந்திருக்கும் என்றும், குக்கி, மேத்தி ஆகிய இரு தரப்பினரும் தொடர்ந்து மோதல்களில் ஈடுபட்டு வரும் நிலையில், ஒரு திருப்பு முனையை அடைவது கடினம் என்றும் திருஅவைத் தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர் என்றும் தெரிவிக்கிறது.

## தீபகச் சுடர் வாசகர்களின் கவனத்திற்கு....

**தீபகச் சுடர் புத்தகம் வாங்க விரும்புபவர்கள் தங்களின் முகவரியை எழுதி, எங்களின் அலுவலகத்திற்கு அக்டோபர் மாதம் 25ம் தேதிக்குள் அனுப்பினால்தான் அடுத்த மாத இதழ் தொடர்ந்து அனுப்ப உதவியாக இருக்கும் என்பதை தெரியப்படுத்துகிறோம்.**

## சுடர் வாசகர் போட்டி - 114 சரியான விடைகள்

1. மறைந்துப் போனது
2. கடவுளுடைய இரக்கத்திற்கும், இரக்கமுள்ள அன்பிற்கும் சாட்சியாக
3. திருவிவிலியத்தை எபிரேயம், அரமாயிக் மொழியிலிருந்து நேரடியாக லத்தீன் மொழிக்கு மொழிபெயர்த்தார்
4. க்ராசியோ மரியோ பொர்ஜியொன், மரியக்யுசெப்பாடி நுன்சியோ
5. புனித இராபர்ட் பெல்லார்மின்
6. பேரரசர் எரோக்ளியுஸ்
7. கொல்கொத்தா நகர் புனித தெரேசா
8. புனித பெரிய கிரகோரியார்
9. 130 நாடுகளில்
10. வின்செண்ட் மறைப்பணிச் சபை குருக்கள்
11. மத்தேயு
12. எசாயா
13. புனித ஹெலன் அம்மாள்
14. புனித அல்போன்ஸ் லிகோரியார்
15. கொல்கொத்தா நகர் புனித தெரேசா

## குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mrs. Catherine, Pondy

Mr. Lourdunathan, Bangalore

Sr. Josephine, Tirupur

## சுடர் வாசகர் போட்டி - 115

1. "தூய்மை" என்பது யாருடன் ஒட்டிப்பிறந்த பண்பு என்று ஆசிரியர் யாரை சொல்கிறார்?
2. கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலர் யார்?
3. "ஆண்டவரே தாவீதின் மகனே என்மேல் இரங்கும்" என்று கத்தியவர் யார்?
4. "இரக்கத்தின் நற்செய்தி" என்று எந்த நற்செய்தியை அழைக்கின்றோம்?
5. பத்து தொழுநோயாளர்கள் மத்தியில் கட்டிப்போடப்பட்ட புனிதர் யார்?
6. "அவனியில் அமைதி" எந்த திருத்தந்தை எழுதிய மடல்?
7. செபமாலையின் முதற்பகுதி என்று ஆசிரியர் எதைக் கூறுகிறார்?
8. புனித குழந்தை தெரேசாவை திருஅவையின் மறைவல்லுநர் என்று அறிவித்தவர் யார்?
9. சமூக சீர்கேடுகளுக்கு எது காரணம் என்று திருத்தந்தை கூறுகிறார்?
10. புனித லூக்கா எந்த நாட்டில் இறந்தார்?
11. இரம்பத்தால் உடல் இரண்டாக அறுக்கப்பட்டு இறந்த மறைசாட்சி யார்?
12. புனித லூயி குவனெல்லா எந்த ஆண்டு புனித தொன் போஸ்கோவை சந்தித்தார்?
13. "மக்கள் மத்தியில் கடவுளை சுமப்பவர்" என்று போற்றப்பட்ட திருத்தந்தை யார்?
14. புனித ஜான் எத்தனையாவது திருத்தந்தை ?
15. அகதிகளை தனது மிதிவண்டியில் அழைத்துச் சென்று உணவளித்தவர் யார்?

## தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ.100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

தீபகம்
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044 - 26428162.

பெயர்: ..................................
முகவரி: ................................
..................................
..................................
..................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

புனிதர் அனைவரின் பெருவிழா
இறந்த நம்பிக்கையாளர் அனைவர் நினைவு
பொதுக்காலம் 31ம் ஞாயிறு
புனித சார்லஸ் பொரோமியோ
சலேசிய உடனுழைப்பாளர்கள், உபகாரிகளுக்காக
இலாத்தரன் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு விழா
பொதுக்காலம் 32ம் ஞாயிறு
நவம்பர் 13 - அருளாளர் ஆர்த்தெமெதே சாத்தி
பொதுக்காலம் 33ம் ஞாயிறு
புனிதர்கள் பேதுரு, பவுல் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு
புனித கன்னிமரியாவைக் காணிக்கையாக அர்ப்பணித்தல்
புனித செசிலியா
அரசராம் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து பெருவிழா
புனித அந்திரேயா விழா

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

முடிவில்லா வாழ்வு பெறுபவர் யார்?
அருளாளர் ஆர்த்தெமெதே சாத்தி
மூவொரு உலகின் அரசர் கிறிஸ்து இயேசு
திருஅவைச் செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை அக்டோபர் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# செப்டம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | செ | குழந்தை இயேசுவின் புனித தெரேசா விழா | யோபு 3: 1-4, 11-17,20-23 | லூக். 9: 51-56 |
| 2 | பு | புனித காவல் தூதர்கள் | யோபு 9: 1-12, 14-16 | லூக். 9: 57-62 |
| 3 | வி | | யோபு 19: 21-27 | லூக். 10: 1-12 |
| 4 | வெ | அசிசி நகர்ப் புனித பிரான்சிஸ் | யோபு 38: 1,12-21, 40: 3-4 | லூக். 10: 13-16 |
| 5 | ச | | யோபு 42: 1-3, 3-5, 12-17 | லூக். 10: 17-24 |
| 6 | **ஞா** | **பொதுக்காலம் 27ம் ஞாயிறு** | **I.** தொ.நூ. 2: 18-24<br>**II.** எபி. 2: 9-11 | மாற்கு 10: 2-16 |
| 7 | தி | புனித செபமாலை அன்னை | தி.ப. 1: 12-14 | லூக். 1: 26-38 |
| 8 | செ | | கலா. 1: 13-24 | லூக். 10: 38-42 |
| 9 | பு | புனிதர்கள் டென்னிஸ்: ஆயர், தோழர்கள் | கலா. 2: 1-2,7-14 | லூக். 11: 1-4 |
| 10 | வி | | கலா. 3: 1-5 | லூக். 11: 5-13 |
| 11 | வெ | புனித 23ம் ஜான் : திருத்தந்தை | கலா. 3: 7-14 | லூக். 11: 15-26 |
| 12 | ச | | கலா. 3: 22-29 | லூக். 11: 27-28 |
| 13 | **ஞா** | **பொதுக்காலம் 28ம் ஞாயிறு** | **I.** சா.ஞா. 7: 7-11<br>**II.** யாக். 4: 12-13 | மாற்கு 10: 17-30 |
| 14 | தி | புனித முதலாம் கலிஸ்டஸ் | கலா. 4: 22-24,26-27,31-5:1 | லூக். 11: 29-32 |
| 15 | செ | இயேசுவின் (அவிலா நகர்) புனித தெரேசா | கலா. 5: 1-6 | லூக். 11: 37-41 |
| 16 | பு | புனித எட்விஜ், மார்கரெட் மரிய அலகோக் அருளாளர் அகுஸ்தின் தேவாரம்பரம்பில் | கலா. 5: 18-25 | லூக். 11: 42-46 |
| 17 | வி | அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார் | எபே. 1: 1-10 | லூக். 11: 47-54 |
| 18 | வெ | புனித லூக்கா நற்செய்தியாளர் விழா | 2திமொ. 4: 9-17 | லூக். 10: 1-9 |
| 19 | ச | புனிதர்கள் ஜான் தெ பிரபெப், ஐசக் ஜோக்ஸ் | எபே. 1: 15-23 | லூக். 12: 8-12 |
| 20 | **ஞா** | **பொதுக்காலம் 29ம் ஞாயிறு** | **I.** எசா. 53: 10-11<br>**II.** எபி. 4: 14-16 | மாற்கு 10: 35-45 |
| 21 | தி | | எபே. 2: 1-10 | லூக். 12: 13-21 |
| 22 | செ | புனித இரண்டாம் ஜான்பால் | எபே. 2: 12-22 | லூக். 12: 35-38 |
| 23 | பு | கப்பெஸ்த்தரானோ நகர்ப் புனித ஜான் | எபே. 3: 2-12 | லூக். 12: 39-48 |
| 24 | வி | புனித அந்தோணி மரிய கிளாரெட் | எபே. 3: 14-21 | லூக். 12: 49-53 |
| 25 | வெ | | எபே. 4: 1-6 | லூக். 12: 54-59 |
| 26 | ச | | எபே. 4: 7-16 | லூக். 13: 1-9 |
| 27 | **ஞா** | **பொதுக்காலம் 30ம் ஞாயிறு** | **I.** எரே. 31: 7-9<br>**II.** எபி. 5: 1-6 | மாற்கு 10: 46-52 |
| 28 | தி | புனிதர்கள் சீமோன், யூதா திருத்தூதர்கள் விழா | எபே. 2: 19-22 | லூக். 6: 12-19 |
| 29 | செ | | எபே. 5: 21-33 | லூக். 13: 18-21 |
| 30 | பு | | எபே. 6: 1-9 | லூக். 13: 22-30 |
| 31 | | | எபே. 6: 10-20 | லூக். 13: 31-35 |

TO SHARE THE LIGHT

## இனியவர்களே....

நமது பள்ளி, கல்லூரி,
தொழிற்கல்வி, இளையோர்
மற்றும் அனைவரும்
இருக்கின்ற இடத்திலிருந்து
நற்பணிகள் செய்து
இயேசுவின்
அன்புப் பணியில்
இணைய

## இயேசுவின் நண்பர்கள்

உங்களை வரவேற்கிறது!

இயேசுவின் நண்பர்கள்

LOVE GOD LOVE OTHERS

FREINDS of JESUS

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள

## தீபகம்

+91 9385201453

TO SHARE THE LIGHT

## தீபகம் தயாரிப்பு

# திருவிவிலிய கண்காட்சி





பங்கு மக்களும், மாணவ மாணவியரும் திருவிவிலியத்தைப் பற்றி எளிதாக அறிந்துக் கொள்ள விவிலிய நிகழ்ச்சிகளை படங்களாகவும், செய்திகளாகவும், விளையாட்டுகளாகவும், வீடியோ காட்சிகள், பொம்மலாட்டம் வழியாகவும், எடுத்தியம்பும் சிறந்த கண்காட்சி.

இந்த கண்காட்சியை பங்குகளிலும், பள்ளிகளிலும் அமைத்து விவிலிய அறிவையும் விசுவாசத்தையும் வளர்க்க உதவிடுவோம்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**தீபகம்**, 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
+91 9385201453 Deepagam Don Bosco



TO SHARE THE LIGHT

JUBILEE 2025 PILGRIMS OF HOPE

# மாபெரும் யூபிலி 2025

## எதிர்நோக்கின் திருப்பயணிகள்

திருத்தந்தை அறிவிப்பை முன்னிட்டு
தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்
வழங்கும்

# பொதுநிலையினருக்கான இரண்டாம் வத்திக்கான் சங்க பயிற்சி பாசறை

**பொருள் : வத்திக்கான் சங்கம் தந்த புதிய பார்வை**

**20 அக்டோபர்**
ஞாயிற்றுக்கிழமை
மாலை 4 மணி முதல் 8 மணி வரை

இடம்
**தீபகம்**
45, லேண்டன்ஸ் சாலை,
கீழ்ப்பாக்கம், சென்னை-10

கருத்துரையாளர்கள்

**"வத்திக்கான் சங்கம் - ஒரு அறிமுகம்"**
திரு.டோனி

**"வத்திக்கான் சங்கத்திற்கு முன்பிருந்த பார்வை"**
திரு. மரிய மைக்கேல்

**"வத்திக்கான் சங்கம் தந்த புதிய பார்வை"**
அருட்திரு. ஓர்துசாமி ச.ச.

**"சங்க ஒளியில் நம் செயல்பாடுகள்"**
திரு. மைக்கேல் ராஜ்

**கலந்துரையாடல்**
திருமதி. அமலி மார்டின்

பதிவு செய்ய இறுதி நாள் 15.10.2024

கட்டணம் ரூ.100/-

நேரலை

தொடர்புக்கு
அருட்திரு.ஜேசுதாஸ் 9444713174 | திரு. சாண்டோ 9840263623 | திரு. தேவராஜன் 9003112385

தயாரிப்பு : DEEPACT (Deepagam Proclamation And Cultural Team)
கணினியேற்றம் : கபிரியேல் மேரி   அட்டைப்பட வடிவமைப்பு : ஜான் அலெக்சாண்டர் - DEEPACT
தயாரிப்பில் மேற்பார்வை : சாண்டோ, ஈசாக்   அச்சிட்டோர் : சிகா அச்சகம், கீழ்ப்பாக்கம், சென்னை - 10